# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 06 அதிர்வு 66 மார்கழி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162


















**ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்**


ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the South Indian Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au

ஜெரா



# கூட்டமைப்பின் அறம் பிழைத்த அரசியல்

தாயகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனித்து 13 ஆண்டுகள் கடந்துவிட்டன. புலிகள் இயக்கத்தில் இணைந்து தமிழர் தாயகம் மீட்கும் போரில் ஆகுதியான வீரமறவர்களுக்கான நினைவுவேந்தலினைத் தமிழ் மக்கள் அதே கனதியுடன் காத்துவருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் மாவீரர் தினத்தினை தமிழர்கள் அனுஷ்டிப்பதற்கு அரசு ஏற்படுத்தும் தடைகள், இராணுவப் புலனாய்வாளர்களின் விசாரணைகள், பொலிஸாரின் கைதுகள், இராணுவத்தின் சுற்றிவளைப்புகள், கண்காணிப்புகள் என அனைத்துவித அரச பயங்கரவாத அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபடியே நினைவேந்தலினைக் கடைப்பிடிக்கின்றனர். 2010 ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை இதே நிலைதான்.

இந்த அச்சுறுத்தல்கள் மாவீரர் நாளில் கலந்துகொள்பவர்களுக்கு மாத்திரமானதல்ல. நிகழ்வினை கிராமம் கிராமமாக ஏற்பாடு செய்பவர்கள் தொடங்கி, மாவீரர்களின் பெற்றோர் - உரித்துடையோரை மாவீரர் துயிலுமில்லங்களுக்கு ஏற்றி, இறக்கும் வாகனச் சாரதிகள் வரை அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்படுவார்கள் விசாரணைக்குட்படுத்தப்படுவார்கள்.

இம்முறை மாவீரர் தினம் மிகப் பெரியளவில் தமிழர் தாயகம் முழுவதும் எழுச்சிபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் ஒவ்வொரு மாவீரர் துயிலுமில்லத்திலும் மக்கள் நிரம்பி வழிந்தனர். மாவீரரது பெற்றோர் - உரித்துடையோர் மாத்திரமின்றி, உற்றார்கள், உறவினர், நண்பர்கள், அடுத்தடுத்த தலைமுறைக் குழந்தைகள் என பேரெழுச்சியான தமிழ் சமூகப் பங்குபற்றுதலுடன் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஒவ்வொரு துயிலுமில்லத்திலும் விதைக்கப்பட்ட மாவீரர்களது எண்ணிக்கையை விட உணர்வோடு கலந்துகொண்டவர்களது எண்ணிக்கை மிக அதிகமாக இருந்தது.

இவ்வாறு மக்கள் பெருந்திரளாக திரண்டு வந்து மாவீரர் நினைவேந்தலினை அனுஷ்டித்தமைக்குப் பல காரணங்கள் உள்ளன. போர் நிறைவடைந்து ஒரு தசாப்தம் கடந்துவிட்டது. தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளும், இராணுவக் கண்காணிப்புக்களும் அதிகரித்து செல்கின்றதே தவிர, குறையவில்லை. பொறுத்திருந்து பொறுத்திருந்து

> **மாவீரர் நாள் நினைவு நாள் முடிந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு, மாவீரர் நாளினை எவ்விதக் குழப்பங்களும் இன்றி தமிழ் மக்கள் அனுஷ்டிக்க இடமளித்தமைக்கு நன்றி தெரிவித்தது. விடுதலைப் புலிகளால் நரி-யென வர்ணிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட ஒருவரான தற்போதைய ஜனாதிபதி, புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தியதில் தலையாய சூத்திரதாரி.**

தமிழ் மக்கள் பொறுமையின் எல்லைக்கே சென்றுவிட்டனர். இராணுவ ஒடுக்குமுறை ஒரு பக்கமென்றால், கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா பரவலை வைத்து தமிழர் மத்தியில் முன்னெடுக்கப்பட்ட அரசின் ஒடுக்குமுறை இன்னொரு கோரத்தாண்டவத்தை ஆடியது. எனவே எங்காவது கூடி கதறியழுது ஆற வேண்டிய கட்டாயத்திற்குத் தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். இந்த அடக்குமுறைகளுக்கும், அதிலிருந்து வெளிவருவதற்கும் ஊர்கூடி அழுதாறி செல்வதே ஒரு சிகிச்சையாகவும் இருந்தது. எனவேதான் இம்முறை என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்ற முடிவோடு தமிழர்கள் மாவீரரை நினைவேந்த துயிலுமில்லங்களுக்கு விரைந்தனர். ஒரு கட்டத்திற்கு மேல் எப்படி கோட்டாகோகம போராட்டக்கார்களை கோட்டபாய ராஜபக்சவினால் கட்டுப்படுத்த முடியாமல் போனதோ, அதே நிலைதான் இங்கும். முப்படைகள், இராணுவப் புலனாய்வுக் கண்காணிப்புக்கள் எவையாலும் மக்களின் எழுச்சியைக் கட்டுப்படுத்த இயலவில்லை. துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டவும் முடியவில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க, மாவீரர் நாள் நினைவு நாள் முடிந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் வைத்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு, மாவீரர் நாளினை எவ்விதக் குழப்பங்களும் இன்றி தமிழ் மக்கள் அனுஷ்டிக்க இடமளித்தமைக்கு நன்றி தெரிவித்தது. விடுதலைப் புலிகளால் நரியென வர்ணிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்ட ஒருவரான தற்போதைய ஜனாதிபதி, புலிகள் இயக்கத்தை பலவீனப்படுத்தியதில் தலையாய சூத்திரதாரி. அது மாத்திரமின்றி தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடிய ஓர் இயக்கத்தை பயங்கரவாதிகள் என சர்வதேச அளவில் பிரசாரப்படுத்தி, அதனை நம்பவைத்தவர்களிலும் பிரதான சூத்திரதாரியே தற்போதைய ஜனாதிபதி. இவ்வாறாக புலிகள் இயக்கத்தை அழிக்க பெரும்பாடுபட்ட ஒருவரின் அனுமதியுடன்தான் மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டதென்பதும், அதற்காக அவருக்கு நன்றி தெரிவிப்பதும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் செய்யும் அயோக்கியத்தனமிக்க அரசியல் ஆகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து கூட்டமைப்பினர் எதிர்பார்க்கும் அற்பசொற்ப சலுகைகளுக்காக ஒட்டுமொத்த மாவீரர்களது தியாகங்களையும் அடகு வைப்பது அறம் பிழைத்த அரசியலே ஆகும்.

உண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு தமிழர் விடயத்தில் தான் நல்லிணக்கப் போக்கினை அல்லது மென்போக்கினைக் கடைபிடிப்பதற்குப் பிரதான காரணமே புலம்பெயர் தமிழர்கள்தான்( குறிப்பாக புலம்பெயர் தமிழர்களிடம் குவிந்திருக்கும் பொருளாதார பலம்தான்) விடுதலைப் புலிகளின் மௌனிப்பிற்குப் பின்னர், புலம் - தாயகம் - தமிழகம் ஆகிய மூன்று பரப்புக்களின் அரசியலையும், பொருளாதாரத்தையும் தீர்மானிக்கும் சக்திகளாகப் புலம்பெயர் தமிழர்கள் இருக்கின்றனர். போரில் தமிழர்களின் முதுகெலும்பினை முற்றாக முறித்துப்போட்ட பின்னரும், ஒரு தசாப்தத்தினுள் அவர்கள் நிமிர்வதற்கு இந்தப் புலம்பெயர்தமிழர்களே காரணம் என்பது ரணிலுக்குத் தெரியும். பொருளாதார ரீதியிலும், புவிசார் அரசியல் ரீதியிலும் இனி மீளவே முடியாது எனக் குறிப்பிடப்படும் இலங்கையை மீட்டெடுப்பேன் என்ற சவாலோடு ஆட்சிபீடமேறிய ரணில் விக்கிரமசிங்கவிற்கு, அதனைச் செய்யவேண்டிய தேவை இருக்கிறது. கடனைத் தவிர வேறெந்த உதவிகளையும் நீண்ட காலத்திற்கு இலங்கைக்கு வழங்க உலக நாடுகள் தயாராகவும் இல்லை. எனவே தான் ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்களின் பொருளாதாரத்தில் கண்வைக்கிறார். முதலீடுகள், பங்குகள், தொழில் மையங்கள் என்ற பெயரில் புலம்பெயர் தமிழர்களின் பணத்தை நாட்டுக்குள் கொண்டு வந்து, தனக்கிருக்கும் பொருளாதார வீழ்ச்சி என்கிற சவாலைத் தோற்கடிக்க முயற்சிக்கிறார். அதற்காகப் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தான் ஒரு நல்லிணக்கவாதி என்கிற நற்பெயரை உருவாக்கவே மாவீரர் நாளை அமைதியாக பார்த்துக்கொண்டிருந்தார். ரணில் விக்கிரமசிங்கவிடம் சிக்கியிருக்கும் இலங்கைத்தீவில் பணம் மட்டும் இருந்திருந்தால், எந்தச் சிங்கள ஆட்சியாளரும் செய்திராத அடக்குமுறையை தன் படைகளைக்கொண்டு, மாவீரர் நாளுக்காகத் திரண்ட மக்கள் மீது ஏவியிருப்பார். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக கோட்டாகோகம போராட்டக்காரர்களுக்கு நடந்திருக்கும் அடக்குமுறையைக் குறிப்பிடலாம்.

அதேபோல சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவிகள், ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச் சலுகைகள் போன்றவற்றைப் பெறுவதற்கு, அந்த அமைப்புகள் முன்வைக்கும் முன்நிபந்தனைகளில் ஒரு சிலவற்றையாவது ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்ட நீக்கம் அல்லது மறுசீரமைப்பு, இனப்பிரச்சினை தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினைக்குத் தீர்வு, தமிழர்களுக்கு இருக்கு நினைவேந்தல் உரிமை, நல்லிணக்க முயற்சிகள் எனப் பல விடயங்களை நிபந்தனைகளாக இலங்கைக்கு நிதியளிக்கத் தரவல்ல மேற்கு நாடுகள் விதிக்கின்றன. எனவே அந்த நிபந்தனைகளில் ஒரு சிலவற்றையாவது செய்துகாட்டி நற்பெயர் எடுக்கவே ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார். அதற்காகவே அவர் மாவீரர் நாளையும் பயன்படுத்திக்கொண்டார். மாவீரர் நாளை அனுஷ்டிக்க அனுமதியளித்தது, அதற்காக தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு நன்றி கூறியமை எல்லாம் அவருக்கான சர்வதேச தரத்தை உயர்த்தவல்ல காரணிகள்.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த அரசியலை விளங்கிக் கொள்ளாது, அவசரப்பட்டு அவருக்கு நற்சான்றுப் பத்திரம் கொடுப்பதெல்லாம் கூட்டமைப்பாரின் சிறுபிள்ளைத்தனமான அரசியலையே வெளிப்படுத்துகின்றது. தன் இனத்தைவிட தன் எஜமானுக்கு நன்றியுடன் இருக்கும் இந்த மனநிலையில் மாற்றம் நிகழாதவரை தமிழர்களுக்குத் தலைமைதாங்கும் தகுதியினைக் கூட்டமைப்பினர் பெறவே முடியாது.


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல்:06 அதிர்வு: 66 மார்கழி 2022 தொ.பே:1800 960 162

# மீண்டும் பழைய பல்லவியா?

விக்டோரியா மாநிலத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் லேபர் கட்சி 54 ஆசனங்களைப் பெற்று அரியணையேறியது. கொரோனாத் தொற்றுக்கால முடக்கத்தை பிரதானப்படுத்தி டானியல் ஆன்ரூஸ்க் கெதிரான கோசத்தை முன்வைத்து களம் கண்ட லிபரல் கூட்டணியின் வீழ்ச்சியானது, கொரோனா கால பாதுகாப்பு கட்டுப்பாட்டுகளை மக்கள் ஏற்கின்றனர் என்பதையே புலப்படுத்துகின்றது.அதேபோல லிபரல் கூட்டணியின் தேர்தல் பரப்புரை தனி மனிதனை இலக்கு வைத்தமையும், லிபரல்களின் படுதோல்விக்குக் காரணம் என பட்டிய லிடலாம். இந்தத்தேர்தலில் கிறீன் கட்சிக்கு 4 ஆசனங்கள் கிடைத்தமை பெரும் திருப்புமுனையாக பார்க்கப்படு கின்றது. அதுவும் நகர்ப்புறத்தில் ஓர் ஆசனத்தைப் பெற்றிருப்பது கிறீன் கட்சியின் செல்வாக்கு மேலெழ ஆரம்பித்துள்ளது என்பதற்கு சான்று பகிர்கிறது.

இதேவேளை நாடாளுமன்றத்தில் லேபர் கட்சி ஆட்சிய மைத்து ஆறு மாதமாகும் நிலையில், இந்தக்காலப்பகுதியில் பிரதமர் அல்பனீஸ் தலைமையிலான அரசு, தேர்தல் கால வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட் டுள்ளன என அறிவித்துள்ளது. அவற்றில் 'மெடிக்கெயர்' திட்டத்தை பலப்படுத்தல், TAFE இலவச கல்வி முறையை மேம்படுத்தல், குறைந்த கட்டணத்தில் குழந்தைப் பராமரிப்பு, அடிப்படைச்சம்பள அதிகரிப்பு போன்றன பிர தானமானவை என லேபர் அரசு மார்தட்டிக்கொள்கின்றது.

அதேவேளை, கடந்த ஒன்பது வருட கால லிபரல் ஆட்சியால் ஏற்படுத்தப்பட்ட குளறுபடிகளை நிவர்த்தி செய்து – அதனை மீள்கட்டமைப்பாக உருவாக்க தாம் தீயாக வேலை செய்து கொண்டிருப்பதாகவும் லேபர் அரசு கூறிவருகின்றது. லேபர் அரசு இவ்வாறு கூறிவந்தா லும், வாழ்க்கைச் செலவினத்தை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை இல்லை என எதிர்ப்பு அஸ்திரங்களை ஏவ ஆரம்பித்துள்ளது லிபரல் கட்சி.

இதற்கிடையில் குடிவரவுத்துறை மீது பொதுமக்கள் கடும் விசனத்தை தெரிவித்து வருவதை சமூகவலைத் தளங்களில் காணமுடிகின்றது. குறிப்பாக, துறைசார் அமைச்சர் தான் சந்திக்கும் பிரபலங்களின் புகைப்படங் களை தனது முகப்புத்தகக்கணக்கில் பதிவேற்றும் போது, அதற்கு கீழ் கருத்திடும் பலரும் "விசா வழங்கும் திட்டத்தை துரிதப்படுத்துங்கள்" என்ற கோரிக்கையை பரவலாக முன்வைத்து வருகின்றனர்.

குடிவரவுத்திணைக்களம் நத்தை வேகத்திலேயே நகர்வதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு, முன்னைய லிபரல் அரசின் அசமந்தபோக்கே காரணம் , அதனால்தான் குடிவரவுத் திணைக்களத்தில் விண்ணப் பங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்றும் எப்போது விரைவு படுத்தப்படும் என்ற காலவரையறை தெரியாது என் றும் லேபர் கட்சி கைவிரித்துள்ளது.

இது இவ்வாறிருக்க படகுவழி வந்த அகதிகளின் தற் காலிக விசாக்கள், நிரந்தர விசாக்களாக மாற்றியமைக்கப் படும் என்று லேபர் தனது தேர்தல் வாக்குறுதியாக வழங்கியிருந்தது. ஆனால் அதற்கு இன்னும் பிள்ளையார் சுழி கூட போடப்படவில்லை. பத்துமுதல் பதினாறு வருடங்கள் குடும்பங்களை பிரிந்து வாழுகின்ற அகதிகள், லேபர் அரசு வந்ததும் புத்துணர்ச்சி பெற்றிருந்தாலும், மீண்டும் பழைய பல்லவிதானா என்ற விரக்தியும் அவர் களைச் சூழ ஆரம்பித்துள்ளது. போராட்டங்கள் நடத்தியும் அதனால் பயனேதுமில்லை. லேபர் ஆண்டால் என்ன, லிபரல் ஆண்டால் என்ன, அகதிகளுக்கு எப்போதும் வலிசுமந்த வாழ்வுதான் என்ற நிலையே ஆஸியில் நீடிக்கின்றது என்பதே கசப்பான உண்மையாகும்.




# திரை கடலோடி...!

**2022** ஜனவரி முதலாம் திகதி முதல் நவம்பர் 30 ஆம் திகதிவரை இலங்கையிலிருந்து 2 லட்சத்து 83 ஆயிரத்து 395 பேர் தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்குச் சென் றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தரவுகள் தெரி விக்கின்றன. இவ்வருடம் முடிவடைவதற்குள் இந்த எண்ணிக்கை 3 லட்சத்து 10 ஆயிரம்வரை அதிகரிக்கக்கூடும் என மேற்படி பணியகம் மதிப்பீடு செய்துள்ளது.

இதற்கமைய இலங்கை வரலாற்றில் வருடமொன்றில் தொழில் நிமித்தம் 3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் நாட்டைவிட்டு வெளியேறியமை இதுவே முதன்முறையாகும் என துறைசார் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாளொன்றுக்கு சராசரியாக 850 பேர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலை காணப்படுகின்றது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை 136 வீதத்தால் அதிகரித்துள்ளது என புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.

இதில் குவைத், சவூதி அரேபியா, கட்டார், ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கே பெரும்பாலானோர் சென்றுள்ளனர். தென்கொரியாவுக்கும் பலர் தொழில் தேடி சென்றுள்ளனர். அமெரிக்கா, இத்தாலி, ஜேர்மன், ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளுக்கு தொழில்சார் நிபுணர்கள், தொழில் நிமித்தம் சென்றுள்ளனர்.

போர் முடிவடைந்த பின்னரும் திண்டாடிக்கொண்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்துக்கு, கொரோனாப் பெருந்தொற்று பேரிடியாக அமைந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் குழப்பம் மரண அடியாக மாற, அந்நியச் செலாவணி இருப்பும்காலியானது. வரிசை யுகம் உருவானது. உணவு பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டன. இறுதியில் இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டது. கடன்களை மீளச் செலுத்தும் ஆற்றலை இலங்கை இழந்தது.

இவ்வாறான நெருக்கடியான சூழ்நிலையால் சிறு முயற்சியாண்மைகள் கூட ஆட்டம் கண்டன. பல துறைகள் ஆட்குறைப்பு செய்தன. இதனால் பலர் தொழிலை இழந்தனர். மேலதிக கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன. இதற்கிடையில் உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு உட்பட வாழ்க்கைச்சுமை என்பது தாங்கமுடியாத அளவுக்கு எகிறியது. மூவேளை உணவைச் சுருக்கி, இருவேளை உண்போம் என ஆட்சியா ளர்கள் அறிவிக்கும் அவலநிலை உருவானது.

இனியும் இங்கு வாழ்ந்து பயன் இல்லை, ஒரு லட்சம் சம்பளம் எடுத்தால் கூட வாழ்க்கையை சமாளிக்க முடியாத நிலை, எனவே, தாங்கள் வெளிநாடு சென்றாவது குடும்பத்தை காப்போம் என்ற எண்ணத்துடனேயே பலர் வெளி யேறுகின்றனர். தொழில் நிமித்தம் வெளிநாடு செல்வோர் எண்ணிக்கை அதிகரிப்புக்கு இதுவே பிரதான காரணம்.

**வயிற்றுப் பிழைப்புக்காக சட்டபூர்வமாகவும், சட்டபூர்வமற்ற விதத்திலும் வெளிநாடு செல்லும் இலங்கைப் பணியாளர்கள் பல்வேறு இன் னல்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட் டுள்ளது. இதற்கு ஓமான் ஆட்கடத்தல் விவ காரம் அண்மைய சிறந்த சான்றாகும். தமது நாட்டு பிரஜைகளுக்கு பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டிய இலங்கைத் தூதரக அதிகாரிகள் சிலரும் முறைகேடுகளில் ஈடுபடுவது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும்.**

சாதாரண மக்கள் மட்டுமல்ல வைத்தியர்கள் உட்பட தொழில்சார் நிபுணர்களும் நாளாந்தம் நாட்டைவிட்டு வெளியேறிவருகின்றனர். இதனால் இலங்கைக்கு உரித்தான மனித வளமும் குன்றிவருகின்றது. இதன் பாதக விளைவுகள் விரைவில் எதிரொலிக்கும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துவிட்டு சென்றவர்களுக்கு அப்பால், சுற்றுலா விசாவில் சென்று தொழில் செய்பவர்களும் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை எடுத்தால், தொழில் நிமித்தம் வெளிநாடு பயணித்தோர் எண்ணிக்கை சற்று அதிகமாகவே இருக்கும். சுமார் 15 ஆயிரம்பேர்வரை இவ்வாறு சுற்றுலா விசாவில் சென்றிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வயிற்றுப் பிழைப்புக்காக சட்டபூர்வமாகவும், சட்டபூர்வமற்ற விதத்திலும் வெளிநாடு செல்லும் இலங்கைப் பணியாளர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது. இதற்கு ஓமான் ஆட்கடத்தல் விவகாரம் அண்மைய சிறந்த சான்றாகும். தமது நாட்டு பிரஜைகளுக்கு பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டிய இலங்கைத் தூதரக அதிகாரிகள் சிலரும் முறைகேடுகளில் ஈடுபடுவது வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும். அதேபோல தாய் நாடு, தாய் நாடு என மார்பில் அடித்துக் கொள்ளும் அரசியல்வாதிகள், மக்கள் தாய்நாட்டில் வாழ முடியாத சூழ்நிலையை கடந்த 74 ஆண்டுகளாக உருவாக்கியதை முன்னிட்டு - மக்கள் முன் மண்டியிட்டு மன்னிப்புக் கோர வேண்டும். ஆனால் அதெல்லாம் இலங்கை போன்ற நாட்டில் நடக்கிற காரியமா? இப்படியே தொழில் தேடி மக்கள் வெளிநாட்டுக்கு சென்றுவிட்டால், ஒருகட்டத்தில் ஆள்களற்ற தீவாக இந்து சமுத்திரத்தின் முத்து மாறிவிடவும் கூடும்.



# தடைகள் உடைத்து சிறகு முளைத்தும்.....!

## அந்தரத்தில் தவிக்கும் ஒரு தமிழ் விமானியின் கனவு



சிறகுமுளைத்தும் பறப்பதற்கு கட்டுப்பாடுகள் இருந்தால் ஒரு பறவைக்கு எப்படியிருக்கும்? அப்படியான நிலையில்தான் இப்போதிருக்கிறார் ஈழ ஏதிலியான டிலன். விமானியாக பயிற்சி பெற்றும் அவரால் வானத்தில் எல்லையற்றுப் பறக்கமுடியாது. காரணம்? வேறென்ன, எல்லா ஈழ ஏதிலிகளுக்கும் உள்ள அதே நிரந்தர விஸா பிரச்சினைதான்.

அண்மைய நாள்களாக டிலன் விமானத்தைச் செலுத்துகின்ற வீடியோக்கள் வைரலாகி வரும் நிலையில், அவரது அனுபவங்களை எதிரொலி வாசகர்களுக்கும் பகிரும் எண்ணத்தோடு டிலன் குடும்பத்தாரை தொலைபேசி வழியே தொடர்புகொண்டோம். டிலனும், அவரது தந்தையும் தெரிவித்த தகவல்கள் மூலமே இறக்கைகள் முளைத்தும் பறக்க கட்டுப்பாடுகள் உள்ள டிலனின் சாபக்கதையை தெரிந்து கொள்ள முடிந்தது.

டிலனின் பூர்வீகம் இலங்கையின் கிளிநொச்சி. பிறந்ததில் இருந்தே இடம்பெயர் வாழ்வே டிலனுக்குச் சொந்தமாக இருந்தது. 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து அகதி முகாமில் தஞ்சமடைந்து, இனியும் இப்படி அகதி முகாமில் அவலப்பட முடியாது என்ற எண்ணத்தில் டிலனின் தந்தை ஒரு முடிவையெடுத்தார். 'கடல்வழியாக உயிரைப் பணயம் வைத்தாவது ஆஸ்திரேலியாவுக்குச் செல்வது' என்பதே அந்த முடிவு. தாங்கள் பட்ட துன்பத்தை தங்கள் பிள்ளைகள் அனுபவிக்கக்கூடாது என்ற எண்ணமே அந்த முடிவை அவர் எடுக்க காரணம்.

திட்டமிட்டபடி கடல்வழியே, படகொன்றில் ஆஸி நோக்கிய உயிரோடு விளையாடும் பயணம் 2014 ஆம் ஆண்டு தொடங்கியது. அப்போது டிலனுக்கு வயது 16. கடலோடும், பேரலைகளோடும், பசியோடும் போராடி ஒருவழியாக பயணத்தின் 16 ஆம் நாளில் ஆஸ்திரேலியக் கரையை அவர்கள் தொட்டதும் 'இனி நம்மைப் பிடித்த சாபமெல்லாம் நீங்கி விடும்' என்றே டிலனின் குடும்பத்தார் எண்ணினர். ஆனால் காலம் அவ்வளவு விரைவாக அவர்களின் சாபத்தைப் போக்க விரும்பவில்லை. சட்டவிரோதக் குடியேறிகள் என்று முத்திரை குத்தி, படகில் வந்தோரை ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு படையினர் தம் கப்பலில் ஏற்றி, அவர்களை இந்தியா அல்லது இலங்கைக்கு நாடு கடத்த முனைந்தனர். பின்னர் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை, முதலில் பேர்த்தில் உள்ள கேட்டீன் குடிவரவு தடுப்பு முகாமில் வைத்திருந்துவிட்டு, அப்படியே அவர்களை அலாக்காகத் தூக்கிச் சென்று நவ்று தீவில் உள்ள ஏதிலிகள் தடுப்பு முகாமில் அடைத்தார்கள். பெயருக்குதான் அது ஏதிலிகள் தடுப்புமுகாம். உண்மையில் அதுவொரு அடர்காட்டில் அமைந்த நரகச் சிறை.

அந்தச் சிறைக்குள் இருந்தபடியே தங்கள் பிள்ளைகளின் வாழ்வில் எப்படி ஒளியேற்றலாம்? என்பதே டிலனின் தந்தையுடைய யோசனை. அதற்கு ஒரே வழி, பிள்ளைகளை நல்லமுறையில் படிப்பிப்பது தான். ஏனெனில் டிலனின் தந்தை பெரிதாகப் படித்திருக்கவில்லை. ஊரில் தொலைக்காட்சி, ரேடியோ போன்றவற்றை திருத்தும் வேலையே செய்துவந்தார். தன்னைப் போல பிள்ளைகளும் கஷ்டப்படக்கூடாது என்று ஆஸ்திரேலியா வந்தும் விடிவில்லையே என்று அவர் ஏங்கினார். சிலநாள்களின் பின்னர் அவர்களுக்கான கண்காணிப்பின் தீவிரம் குறைக்கப்பட்டு, நவ்று சமூகத்தோடு இணைக்கப்பட்டார்கள். இப்போது டிலனின் தந்தை அங்கே ஒரு வேலைக்குப் போகத் தொடங்கினார். தான் உழைப்பதில் சுமார் 70 வீதமான பணத்தை பிள்ளைகளின் கல்விக்காகவே செலவழித்தார்.

டிலன் இலங்கையில் இருந்து வரும்போது சுமாரான ஆங்கில அறிவுடனேயே வந்திருந்தார். என்றாலும் முயற்சியை அவர் கைவிடவில்லை. நவுறுவில் அங்கேயே தரம் 10 முதல் 12 வரை கணிதம் ,பௌதிகம், இரசாயனவில், தொழில் நுட்பவியல் போன்ற பாடங்களைக் கற்றார். அப்படி பாடசாலையில் கற்கும் போது டிலன் அடிக்கடி விமானங்களைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. ஏனெனில் அவரின் பாடசாலைக்கு நேரெதிரேதான் விமான நிலையம் இருந்தது. அங்குவரும் விமானங்கள் டிலனினின் கனவுக்குள் புகுந்தன. 'நானொரு விமானியாக வரவேண்டும்' என்ற ஆசையை டிலனுக்குள் ஊட்டின. பாடங்களை விடவும் விமானங்களே டிலனின் மூளைக்குள் அதிகமாகப் பதிவாகத் தொடங்கின.

டிலன் கணிதபாடத்தின் சிறப்பான அடைவை எட்டியதும் மேற்கொண்டு படிக்க நினைத்தார். அவரின் சக மாணவன் பிஜி நாட்டைச் சேர்ந்தவர். அங்கு டிலன் மேற்கல்வியைக் கற்க அந்த நண்பன் வழி சொன்னான். டிலனும் பிஜி நாட்டில் மேற்கற்கைக்கு விண்ணப்பிக்க, அவருக்கு அங்கு கற்பதற்கான வாய்ப்பு உடனே கிடைத்தது. ஆனால் அந்தச் சமயத்தில்தான் ஆஸி அரசு , ஏதிலி என்பதைக் காரணம் காட்டி, டிலனின் பிஜி நாட்டுக் கற்கைநெறிக் கனவில் மண்ணள்ளிப் போட்டது. அதன் பின்னர் மேற்படிப்புக் கனவுக்கு தற்காலிக விடை கொடுத்துவிட்டு, நவுறு தீவில் உள்ள மீன்பிடித் தொழினுட்ப பிரிவில் 3 மாதங்கள் பணியாற்றிவிட்டு, பின்னர் 'எல்லைகள் அற்ற மருத்துவ அமைப்பில்' இணைந்தார் டிலன். அந்த அமைப்பினர், டிலன் போன்ற ஏதிலிகளுக்கு ஆஸ்திரேலியாவில் இடமளிக்க வேண்டுமென வழக்குத் தொடுத்ததன் பயனாக, டிலன் குடும்பத்தினர் உள்ளிட்ட பலர் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்து, வாழும் சூழல் ஏற்பட்டது.

(08ஆம் பக்கம் பார்க்க)



# உலக சம்பியன் யார்?

● பேனா



மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான கட்டாரில் நடைபெற்று வருகின்ற உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர் மிக விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. காலிறுதிப்போட்டிக்கு பலம் வாய்ந்த அணிகள் முன்னேறியுள்ளதுடன், முதல் சுற்றுடன் பலம் வாய்ந்த அணிகள் சில அதிர்ச்சியூட்டும் வகையில் வெளியேறியுள்ளன.

உலகக்கிண்ண இரண்டாம் சுற்றில் விளையாடும் வாய்ப்பு இத்தாலிக்கு தொடர்ச்சியாக இரண்டாவது தடவையாகவும் கைநழுவிப் போனது. முதல் சுற்று ஆட்டத்தில் பலம் பொருந்தி ஆர்ஜன்டீனாவை, சவுதி அரேபியா வீழ்த்தியதும், மறுபுறம் பலம் பொருந்திய ஜேர்மனியை ஜப்பான் வீழ்த்தியதும் பெல்ஜியத்தை மெரோக்கோ



வீழ்த்தியதும், போர்த்துகல்லை தென் கொரியா வீழ்த்தியதும் ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்தன.

கடந்த முறை போன்று இம்முறையும் ஜேர்மனி முதல் சுற்றுடன் உலகக்கிண்ணத்திலிருந்து வெளியேறியது. அதுதவிர கடந்த முறை மூன்றாம் இடத்தை கைப்பற்றிய பெல்ஜியம் அணி இம்முறை முதற் சுற்றுடன் வெளியேறி அதிர்ச்சியளித்தது.

இதுவரை மொத்தமாக ஆறு அணிகள் காலிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்பை உறுதிப்படுத்தியுள்ளன. நெதர்லாந்து, ஆர்ஜன்டீனா அணிகளும், பிரேசில், குரேஷியா அணிகளும், இங்கிலாந்து, பிரான்ஸ் அணிகளும் ஏற்கனவே தகுதி பெற்றுள்ளன.

காலிறுதிக்கான வாய்ப்பை எந்தவொரு ஆசிய அணியும் பெறவில்லை என்பது ஆசிய கால்பந்தாட்ட இரசிகர்களுக்கு பெரும் கவலையாக இருந்தாலும், ஆசிய அணிகள் முதல் சுற்று ஆட்டங்களில் மிக பிரபல்யமான அணிகளை வீழ்த்திய மகிழ்ச்சியுடன் உலகக் கிண்ணத்திலிருந்து வெளி-யேறின.

கிண்ணத்தை வெல்லும் என எதிர்பார்க்கப்படுகின்ற பிரேசில் அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது . நடப்புச் சம்பியன் பிரான்ஸ் அணியும் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றது. உலகின் முதற்தர கால்பந்தாட்ட நட்சத்திரங்களான கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லயனல் மெஸ்ஸி ஆகியோரின் கடைசி உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடராக இது விளங்குகின்றமையால் உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற முனைப்பில் அவர்களும் களமிறங்கியுள்ளனர்.

காலிறுதிக்கான வாய்ப்பை எந்தவொரு ஆசிய அணியும் பெறவில்லை என்பது ஆசிய கால்பந்தாட்ட இரசிகர்களுக்கு பெரும் கவலையாக இருந்தாலும், ஆசிய அணிகள் முதல் சுற்று ஆட்டங்களில் மிக பிரபல்யமான அணிகளை வீழ்த்திய மகிழ்ச்சியுடன் உலகக் கிண்ணத்திலிருந்து வெளியேறின.

கோடானு கோடி இரசிகர்களை ஈர்த்துள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தில் இம்முறை- எதிர்வரும் 18ஆம் திகதி- மகுடம் சூடுவது யார் என்ற எதிர்பார்ப்பே இரசிகர்கள் மத்தியில் மேலோங்கி உள்ளது.



# தடைகள் உடைத்து சிறகு முளைத்தும்...!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நவ்று தீவில் இருக்கும் போதே, ஆஸ்திரேலியாவில் விமானிகளுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனமொன்றுக்கு பயிற்சிக்காக டிலன் விண்ணப்பித்திருந்தார். ஆனால்'நவ்று தீவில் இருப்பதால் அது சாத்தியமில்லை. ஆஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர் உங்களுக்கு பயிற்சியளிக்கலாம்' என்று பதில் வந்திருந்தது. ஆஸ்திரேலியாவுக்குள் வாழ அனுமதி கிடைத்ததும் டிலன் அந்த விமானிகள் பயிற்சியகத்துக்கு போனார். அங்கே அவரைத் தெரிவு செய்து உடனேயே கற்கை நெறிக்கு வருமாறு கூறினார்கள். ஆனால் அது உடனடிச் சாத்தியமில்லை. அங்கு கற்க வேண்டுமாயின் குடிவரவுத் திணைக்களத்தின் அனுமதி தேவை. பெருந்தொகைப் பணமும் தேவை. அதனால் டிலனுக்கு இன்னொரு யோசனை வந்தது. விமானிக்கான கற்கை நெறி என்பதற்குப் பதிலாக 'விமானம் ஓட்டுவதற்கான உரிமத்தை பெற அனுமதிக்கவும்' என்று குடிவரவுத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்தார். 'பயிற்சிதானே ' என்று அனுமதியும் கிடைக்க, டிலனின் வானத்தில் பறக்கும் ஆசைக்கு உயிர் கிட்டியது. இடையறா முயற்சியின் விளைவாக, இப்போது ஒரு விமானியாகி விட்டார் டிலன்.

விமானியானதும் அவர் செய்த முதல் வேலை, தன் பெற்றோரை தனது விமானத்தில் ஏற்றி வானில் பறந்து காட்டியதுதான்.

ஆனாலும் அவர் பயணிகள் விமானத்தை செலுத்த இன்னும் அனுமதி கிடையாது. ஏனெனில் விமானிகளுக்கான அனுமதிப்பத்திரம் பெறாமல் பயணிகள் சேவையில் டிலன் ஈடுபடமுடியாது. அப்படி அவர் விமானிக்கான உரிமத்தைப் பெற வேண்டுமாயின் ஆஸ்திரேலிய நிரந்தர விஸா முக்கியம். ஏதிலி என்ற முத்திரை காரணமாக, நிரந்தர விஸாவுக்கும் உடன-டிச் சாத்தியமில்லை.

"என்றோ ஒருநாள் எனக்கும் ஆஸ்திரேலியாவில் விஸா கிடைக்கும். அதன் பிறகு என் விமானியாகும் கனவு சட்டபூர்வமாக முழுமையாகி, விமானிக்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வேன். எனது நாட்டில் இருந்திருந்தால் நான் தமிழன் என்ற காரணத்தால், இப்படி விமானியாகும் வாய்ப்புக் கிடைத்திராது. அதற்காகவேனும் ஆஸ்திரேலிய அரசுக்கு நன்றி சொல்லவேண்டும். இலங்கையில் இருந்து வருவோர் என்னைப் போல விமானியாக நினைத்தால் அதற்கு உதவக் காத்திருக்கிறேன்" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார் டிலன்.

டிலனின் கனவுகளும், சிறகுகளும் வானமெங்கும் விரியட்டும்.



# ஆஸ்திரேலியாவை அளந்தவர்





கார்த்திக்வேலு

ஆஸ்திரேலியர்களில் எனக்கு மிகவும் பிடித்த விஷயங்களில் ஒன்று மிகப்பெரும் சாதனைகளைச் செய்வர்கள் கூட அதிகமும் அலட்டிக்கொள்ளாமல் இருப்பது. இதை விளையாட்டு சார்ந்த துறைகளில் அதிகம் பார்க்கலாம். பல பெரும் நட்சத்திரங்கள் ஒன்றும் சாதித்திராதது போல அதெல்லாம் பெரிய விஷயமே இல்லை என்பது போல வளைய வருவார்கள். இவ்வகை அவையடக்கம் ஒரு சமூகத்தில் மிகவும் அரிய பண்பு தான். ஆனால் இன்னொரு வகையில் இது நமக்கு இழப்பும் கூட. இந்தத் தன்னடக்கத்தின் காரணமாக பல சாதனையாளர்கள் போதிய அளவு கொண்டாடப்படாமல் இருப்பது ஒரு சமூகம் தனக்கான இலட்சிய நகர்வு என்று எதையும் முன்வைத்துக்கொள்ளாத ஒரு சூழலை உருவாக்கிவிடும் .

நெட் பிராக்மேன் (Nedd Borckmann) அப்படியான ஒரு அலட்டிக்கொள்ளாத நாயகன். நெட் ஆஸியின் அமைதியான ஒரு சிறிய நகரம் ஒன்றில் பிறந்து வளர்ந்த எலெக்ட்ரீசியன் . ஓடுவதில் நாட்டம் கொண்டவர். நாட்டம் என்றால் வார இறுதியில் 10 கிலோமீற்றர் ஓடிவிட்டு பின் பியர் குடிக்கப் போய்விடும் நாட்டம் அல்ல . தொடர்ந்து நாட்கணக்காக ஓடிக்கொண்டே இருப்பார் . சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் கிட்டதட்ட 4000 கிலோமீற்றர் தூரத்தை அதாவது மொத்த ஆஸ்திரேலிய கண்டத்தையும் மேற்கிலிருந்து கிழக்காக ஓடிக்கடந்திருக்கிறார். மொத்தம் 47 நாட்கள் விடாது ஓடியிருக்கிறார் .

ஆஸியில் கார் ஓட்டுபவர்களில் தினப்படி சராசரி பயணத் தூரமே 43 கிலோமீற்றர் தான். அதாவது ஒரு சராசரி ஆஸ்திரேலியப் பிரஜை ஒருவர் தினமும் தன் காரில் கடக்கும் தூரத்தை விட , நெட் இரண்டு மடங்கு தூரத்தை தினமும் ஓடிக் கடந்திருக்கிறார். உடல் வலு என்பது ஒரு புறம் என்றால் இப்படி தொடர்ந்து ஓடிக்கொண்டிருப்பது என்பது தீவிரமான உளக்குவிப்பையும் மன உறுதியையும் கோருவது.அப்படி ஒரு ஒற்றைத்தீவிரம் இல்லாமல் இப்படி ஒரு சாதனையை ஆலோசனையாகக் கூட முன்வைக்க முடியாது.

நெட் பிராக்மேன் சிட்னியில் இருந்து நானூறு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள ஃபோர்ப்ஸ் (Forbes ) என்னும் சிற்றூரை சார்ந்தவர். வெறும் எட்டாயிரம் பேர் மட்டுமே வசிக்கும் ஊர். அது வருடா வருடம் நடக்கும் ஒட்டகப் பந்தயத்துக்கு புகழ்பெற்றது, அதை விடுத்து பெரிதாக ஏதும் நிகழாத அமைதியான ஊர் . அவர் பணி நிமித்தம் சிட்னி வந்தபோது இங்கு நகரங்களில் வீடின்றி சாலையோரம் வசிக்க நேரும் மக்களைக் கண்டதும் துணுக்குற்றார். இவ்வளவு வளங்களைக் கொண்ட நாட்டில் மக்கள் வீடின்றி சாலை ஓரத்திலும் பூங்காக்களிலும் உறங்குவது அவரைப் பாதிக்கிறது. அப்படி வீடின்றித் தவிக்கும் மக்களுக்கு உதவும் வண்ணம் ஏதாவது செய்ய வேண்டும் என்று எண்ணினார்.அப்படி ஆரம்பித்ததே இந்தத் தொடர் ஓட்ட எண்ணம்.

இரண்டு வருடங்களுக்கு முன் கோவிட் ஆரம்பித்த காலகட்டத்தில் ஒரு தொண்டு நிறுவனத்துக்கு நிதி திரட்டும் வகையில் 50 நாட்களில் 50 மரதன் போட்டிகளில் ஓடி-னார் .அதாவது தினமும் 42 கிலோமீற்றர் . இதுவே ஒரு அரிய சாதனைதான். நெட் இதை இன்னும் ஒரு கடின-மாக சவாலாக முன்வைத்து இதைவிடபெரிதாக ஏதேனும் செய்யலாம் என்று எண்ணினார் . அத விளைவே இந்த ஆஸ்திரேலியாவை ஓடியே கடப்பது என்ற சவால்.

முன்னர் தினம் ஒரு 'மரதன் ' என்பதை சிட்னியில் இருக்கும் ஒரு பார்க்கில் ஓடினார் .ஆனால் இது தார்ச் சாலைகளில் வெட்ட வெளியில் எவ்விதப் பாதுகாப்பும் இன்றி வாகனங்கள் செல்லும் பாதையில் ஓடுவது. அதுவும் பெரும்பாலான பயணப்பகுதிகள் முற்றிலும் ஆள் அரவமற்ற பாலைவனம் போன்றவை. குறிப்பாக நல்லர்போர் (Nullarbor ) எனப்படும் சமவெளிப்பகுதி மிகத்தட்டையான, மரங்களே அற்ற பகுதி. 1600 கிலோ மீற்றர் தூரத்துக்கு விரியும் பாலைவனப் போன்ற பகுதி . ஒரு நேர்கோட்டில் இழுத்தது போன்ற சாலை . 40 டிகிரி செல்சியசுக்கு குறையாத வெப்பம் , மேற்கு நோக்கி தொடர்ந்து வீசும் வலுவான எதிர்க்காற்று . இந்தப் பகுதியை காரில் கடப்பதென்றாலே இரண்டு நாட்களாகும். இதை ஒற்றை ஆளாக ஓடிக்கடப்பது என்பது இரும்பினாலான மன உறுதி கொண்டிருந்தால் மட்டுமே சாத்தியம் .

தனது பயணத்தின் 12 ஆம் நாளில் நெட்டுக்கு குதிகாலில் உள்ள சவ்வு வீங்கி நடக்கவே முடியாமல் போய்விட்டது. அதை 'ஸ்கான்' செய்து பார்த்து உரிய மருத்துவ உதவி பெற கிட்டத்தட்ட 18 மணி நேரம் காரில் பயணம் செய்ய நேர்ந்தது. இரண்டு ஸ்டெராய்ட் ஊசிகள் போட்டுக்கொண்டு காரில் பயணம் செய்து ஓட்டத்தை நிறுத்திய இடத்துக்கே வந்து மீண்டும் ஓடத் தொடங்கினார் நெட் - அவ்வளவு தனிமையானது இந்தப் பகுதி.

தொடர்ந்து தார்ச் சாலைகளில் ஓடுவதால் ஒரு கட்டத்தில் பாதத்தில் இருந்த கொழுப்பு பகுதி சுத்தமாக அமிழ்ந்து தட்டையாகி விட்டதாக அவர் குறிப்பிடுகிறார் . தொடர் உராய்வினாலும் வெப்பத்தினாலும் கால் விரல் நகங்கள் பிய்ந்து வர அதனுள் எப்படியோ நுழைந்து விட்ட பூச்சி அங்கு முட்டையிட்டு அதிலிருந்து சிறிய பூச்சிகள் பறந்து வந்ததையும் விவரிக்கிறார் .

இந்த ஓட்டத்தின் மூலம் 1 மில்லியன் டொலர் நிதி திரட்டலாம் என்ற இவரின் எதிர்பார்ப்பை விஞ்சும் வண்ணம் இவருக்கு நிதி குவிந்தது. இதுவரை கிட்டத்தட்ட 2.2 மில்லியன் டொலர் திரண்டிருக்கிறது . இந்த ஓட்டத்தை சமூக ஊடகங்கள் மூலம் தினப்படி பதிவிட்டும் வந்தார் . அதன் மூலம் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் நெட்டுக்கு ஊக்கம் அளித்தது ஒருபுறம் என்றால் அதை விட பல மடங்கு அவர் பிறருக்கு ஊக்கமளித்தார் என்றும் கூறலாம் .

நெட் பிராக்மேன் என்ற இந்த இளைஞருக்கு வெறும் 23 வயதுதான் ஆகிறது .சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு உதவும் வகையில் இப்படி ஒரு விஷயத்திற்காக இவ்வளவு கடினமான ஒரு சாதனையை முடித்திருப்பது அவர் இன்னும் செல்லக்கூடிய தூரங்களை, நிகழ்த்தக்கூடிய சாதனைகளை, ஆற்ற முடிகிற சமூகப்பணிகளின் சாத்தியகூற்றை சுட்டி நிற்கிறது .

இவருக்கு இந்த வருடத்திற்கான Australia of the Year விருது வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையும் பலரிடம் இருந்து எழுந்துள்ளது. ஒவ்வொரு வருட இறுதியிலும் சமூகத்துக்கு சிறப்பாக பங்களிப்பவர்களுக்கு அளிக்கப்படும் இந்த விருதுக்கு நெட் எல்லா விதங்களிலும் தகுதி வாய்ந்தவர் என்றே நினைக்கிறேன்.

ஆஸி என்றுமே விளையாட்டில் ஆர்வம் கொண்ட ஒரு சமூகம்.விளையாட்டில் உள்நாட்டிலும் உலகாள விலும் தொடர்ந்து தனது முத்திரையைப் பதித்து வரும் நாடு. ஆனால் நம் விளையாட்டு வீரர்கள் தமக்கு மக்களிடையே உள்ள மதிப்பையும் பிரபலத்தையும் சரியாக பயனபடுத்திக் கொள்ளவில்லையோ என்ற எண்ணம் எனக்கு உண்டு. இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் போன தலைமுறையைச் சார்ந்த விளையாட்டு வீரர்கள் கூட ஊடகங்களிலும் பொதுவாழ்விலும் தொடர்ந்து புழங்கி வருவதைப் பார்க்கிறோம் ஆனால் இங்கு அந்தச் சூழல் ஏதோ காரணத்தால் நிகழ்வதில்லை .

கேத்தி ஃப்ரீமேன் , இயான் தோர்ப் , அன்ரனி மண்டீன் , லெய்டன் ஹீவிட் , கெடல் இவான்ஸ் என்று விளையாட்டில் இருந்து விலகிய பின் கிட்டத்தட்ட பொதுவாழ்க்கையில் இருந்து காணாமல் போய்விட்ட வீரர்களின் பெரிய பட்டியலையே சொல்லலாம்.

இவர்களின் பிரபல அடையாளமும் , ஏதோ வகையிலான தொடர் சமூகப் பங்கேற்பும் ஆஸி சமூகத்திற்கு குறிப்பாக இளையோருக்கு பெரும் ஊக்கமாக இருந்திருக்கும். சிட்னி ஒலிம்பிக் நீச்சல்குளத்திற்கு என் மகனை நீச்சல் பயிற்சிக்கு கூட்டிச் செல்லும் போதெல்லாம் அங்கு உலோகத்தில் பிரதி செய்து வைக்கப்பட்டிருக்கும் நீச்சல் வீரரான இயான் தோர்ப்பின் பாதங்களைக் காண்பிப்பேன். துடுப்பு போன்ற மிகப்பெரிய பாதங்கள் (Size 17). அது குழந்தைகளுக்கு பெரும் பிரமிப்பாக இருப்பதை கவனித்திருக்கிறேன். ஒருவேளை அவரை நேரில் சந்தித்தால் இந்தச் சிறுவர்கள் எவ்வளவு உற்சாகவும் ஊக்கமும் பெறுவார்கள் என்று எண்ணிக்கொள்வேன்.

நெட் போன்ற சாதனையாளர்களை, அவர்கள் தொடர்ந்து சமூகப் பங்களிப்பு ஆற்றும் விதமாக அரசு அவர்களை தூதுவர்களாக , பொதுவெளியில் இளைஞர்களிடமும் குழந்தைகளிடமும் உரையாடும் வகையில் முன்னிறுத்தி அதற்குரிய பொருளாதார உதவிகளையும் வழங்க வேண்டும்.சமூகத்திற்கு பங்காற்றுபவர்களை, சாதனையாளர்களை நாயகர்களாக முன்வைப்பதன் மூலம் நாம் அவ்வகைச் செயற்பாட்டாளர்கள் பலரும் உருவாகும் ஒரு பாதையை அமைக்கமுடியும். எதை முன்னிலைப்படுத்துகிறோமோ அதுவே செழிக்கும்.

LEGAL STUDIES TUITION

YEAR 11 AND YEAR 12

BY VICTORIAN SOLICITOR




FOR FURTHER DETAILS

PLEASE CONTACT:
0405982583
or
Email: nag418662@gmail.com



# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin



# வழியா இல்லை பூமியில்?

சியாமளா யோகேஸ்வரன்

கல்விக்காகவும் தரமான வாழ்வுக்காகவும் வெளிநாட்டை நாடி ஓடி வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகின்றது. வெளிநாட்டு வாழ்க்கையில், பணம், கார், பெரிய வீடு என்ற பகட்டான வசதிகளின் பின்னால் மறைந்திருக்கும் வலிகளும் வேதனைகளும் மற்றவர்களின் கண்களுக்குப் புலப்படாமலேயே போய் விடுகின்றன. தனிமையின் கொடுமையும், தம் துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு அவற்றை இறக்கி வைக்க முடியாத அவல நிலையும் சேர்ந்து கொள்ள தற்கொலைகள் மட்டுமே ஒருகாலத்தில் அதிகமாக இருந்தன. இப்போதோ தீவிர மனச்சிதைவின் காரணமாகக் குடும்ப உறுப்பினர்களைக் கொன்று விட்டு தாமும் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

அண்மையில் பேர்த்தில் வாழ்ந்த ஒரு தந்தை, ஆறு மற்றும் நான்கு வயதான பச்சிளம் பாலகர்களைக் கொன்று விட்டு தானும் தற்கொலை செய்து கொண்ட ஒரு சம்பவம் கேட்பவரின் மனதை உலுக்கிப் போட்டிருந்தது. ஒரு பாவமும் அறியாத அந்தச் சிறுவனும், சிறுமியும் பெற்றோரின் அரவணைப்பிலும் வழிகாட்டலிலும் இன்னமும் நிறைய ஆண்டுகள் வாழப் போகின்றோம் என்ற கனவுகளைச் சுமந்து கொண்டிருந்திருப்பார்கள். ஒரு பாவமும் அறியாத அந்தக் குழந்தைகள் அற்பாயுசுடன் இந்த உலகத்தை விட்டு போவதற்கு செய்து விட்ட பாவம்தான் என்ன?

இதே போன்ற இன்னொரு சம்பவம் மெல்பேர்னில் நடந்தேறியுள்ளது. நாற்பத்து இரண்டு வயதேயான தாய் ஒருவர் ஏழு, ஐந்து, மற்றும் மூன்று வயதேயான இளம் பிஞ்சுகளைக் கொன்று விட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார். தந்தை புதிய தொலைக்காட்சி ஒன்றை வாங்கி வரச் சென்றிருக்கிறார் எனும் போது எவ்வளவு ஆவலுடன் தந்தையின் வருகைக்காக அந்தக் குழந்தைகள் காத்திருந்திருக்கக் கூடும். தன் வாழ்வில் முப்பது மாதங்கள் சுமந்து பெற்ற பிள்ளைகளைக் கொல்வதற்கு அந்தத் தாய்க்கு எப்படி மனம் வந்தது? அல்லது அந்தத் தாயின் மனம் அப்படி இரும்பாக விறைத்து இறுகிப் போவதற்கான காரணம்தான் என்ன? தற்கொலை செய்வதே குற்றம் என்று கூறும் போது பெற்றெடுத்த குழந்தைகளேயாயினும் அவர்களைக் கொல்வது என்ன விதத்தில் நியாயமாகக் கூடும்? பெற்றவர் என்பதால் அந்தக் குழந்தைகளை அழிப்பதற்கான உரிமையும் கூடவே வந்து விடுகிறதா? அல்லது அந்தக் குழந்தைகள்தான் தம்மால் வாழ முடியாது என்று அழுது புலம்பினார்களா?

இந்நிகழ்வுகளைக் காணும் போது பிள்ளைகளின் இழப்பால் தனது துணைவர் வருந்தட்டும் என்று அவருக்கு ஆயுள் தண்டனை கொடுத்து விடுவது போல் அல்லவா இந்தக் கொலைகள் தோன்றுகின்றன? அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இரண்டு பெற்றோரும் இல்லாவிட்டால் கூட வாழ்வதற்கு ஆயிரம் வழிகள் இருக்கின்றன. பெற்றெடுத்தோம் என்பதற்காக கொலை செய்யும் அதிகாரத்தை எவருக்கும், யாரும் தந்து விடவில்லை. பெற்றவருக்கு பேணி வளர்ப்பதே கடமை என்பது கூட மனதில் பதியாத கலாசாரத்தில் வாழ்வதால் வருகின்ற பாதிப்பாகக் கூட இவையெல்லாம் இருக்கலாம்.



இந்த மனநோய் எம்மவர்களிடையே ஏற்படுவதற்கான காரணங்கள் தான் என்ன? சொந்தங்களில் இருந்து வெகு தூரத்தில் இருப்பதே ஒரு வகையான வேதனைதான். சுற்றி வர உற்றார் கூடியிருக்க மகிழ்ந்திருந்த காலங்கள் எல்லாம் மனதில் ஊர்வலமாகப் போகும் போது தானாகவே ஒரு வெறுமை ஏற்படுகின்றது. அதுவரை பெற்றோரின் இறகுகளுக்குள் பாதுகாப்பாக இருந்தவர்களுக்கு புது உலகத்தில் முழுப்பொறுப்புகளுடான வாழ்க்கை எனும்போது தானாகவே ஒரு அச்சம் உருவாகி விடுகின்றது. எப்படி வாழப்போகிறோம்? அந்நியச் சூழலில் எப்படிக் குழந்தைகளை வளர்க்கப் போகிறோம் ? என்பன போன்ற அச்சங்கள் எல்லாம் எதிர்காலத்தை நிச்சயமற்ற தன்மைக்குள் தள்ளி விடுகின்றன.

மனநோய் எம்மவர்களிடையே ஏற்படுவதற்கான காரணங்கள் தான் என்ன? சொந்தங்களில் இருந்து வெகு தூரத்தில் இருப்பதே ஒரு வகையான வேதனை தான். சுற்றி வர உற்றார் கூடியிருக்க மகிழ்ந்திருந்த காலங்கள் எல்லாம் மனதில் ஊர்வலமாகப் போகும் போது தானாகவே ஒரு வெறுமை ஏற்படுகின்றது. அதுவரைப் பெற்றோரின் இறகுகளுக்குள் பாதுகாப்பாக இருந்தவர்களுக்கு புது உலகத்தில் முழுப்பொறுப்புகளுடான வாழ்க்கை எனும்போது தானாகவே ஒரு அச்சம் உருவாகி விடுகின்றது. எப்படி வாழப்போகிறோம்? அந்நியச் சூழலில் எப்படிக் குழந்தைகளை வளர்க்கப் போகிறோம் ? என்பன போன்ற அச்சங்கள் எல்லாம் எதிர்காலத்தை நிச்சயமற்ற தன்மைக்குள் தள்ளி விடுகின்றன.

ஊரில் பொருளாதார நெருக்கடியே பெரும்பாலான மன நோய்களுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. இங்கோ, மனக்காயங்களை வருடிக் கொடுத்து, தேவையான ஆலோசனைகளைத் தந்து உடனிருந்து தாங்கிக் கொள்ள ஒரு உறவில்லாத வெறுமையே பெரும்பாலான தற்கொலைகளுக்கும் கொலைகளுக்கும் காரணமாகி இருக்கின்றது. நவீன தொழில் நுட்ப வளர்ச்சியும் கூட மனிதமனத்தை மரத்துப் போக வைப்பதற்கு ஒரு காரணமாக இருக்கின்றது. உடலும் சதையும் கொண்ட மனிதனுடன் பழகுவதை விட, தன்னைச் 'சார்ஜ்' ஏற்றிக் கொண்டு எம் உணர்வுகளைக் கொல்லும் தொலைபேசியுடன் கழிக்கும் நேரங்கள் தானே அதிகமாக இருக்கின்றன.

எமது நாட்டில் மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றோம் என்பதை அறியாமலேயே ஒரு துயரமான அல்லது வேதனையான கட்டத்தைத் தாண்டி வந்து விட்டிருப்போம். சுற்றமோ, நண்பர்களோ அல்லது உறவினர்களோ கூட நின்று எமது சுமையைத் தாங்கிக் கொண்டிருப்பார்கள். மேற்கத்தைய நாடுகளில் மன அழுத்தம் அல்லது மனச்சிதைவு பற்றிய விழிப் புணர்வு அதிகமாயிருப்பதால் நேரத்துடனேயே வியாதிகளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள்தான். ஆனால் மிகச் சிறிய மன அழுத்தத்துக்கும் 'டிப்பிரசன்' என்று பெயர் வைத்து சிகிச்சை செய்ய முற்படும் போது பாதிக்கப்பட்டவர் தன்னைத் தீவிர மனநோயாளியாகவே கருதிக் கொள்ளத் தொடங்குகிறார்.

எமது நாட்டில் மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றோம் என்பதை அறியாமலேயே ஒரு துயரமான அல்லது வேதனையான கட்டத்தைத் தாண்டி வந்து விட்டிருப்போம். சுற்றமோ, நண்பர்களோ அல்லது உறவினர்களோ கூட நின்று எமது சுமையைத் தாங்கிக் கொண்டிருப்பார்கள். மேற்கத்தைய நாடுகளில் மன அழுத்தம் அல்லது மனச்சிதைவு பற்றிய விழிப்புணர்வு அதிகமாயிருப்பதால் நேரத்துடனேயே வியாதிகளைக் கண்டுபிடித்து விடுகிறார்கள்தான். ஆனால் மிகச் சிறிய மன அழுத்தத்துக்கும் 'டிப்பிரசன்' என்று பெயர் வைத்து சிகிச்சை செய்ய முற்படும் போது பாதிக்கப்பட்டவர் தன்னைத் தீவிர மனநோயாளியாகவே கருதிக் கொள்ளத் தொடங்குகிறார்.

மற்றவருக்கு தான் ஒரு மன நோயாளி என்று தெரிந்து விட்டது என்று கற்பனை பண்ணிக் கொண்டு தனிமையை அதிகம் நாடத் தொடங்குகின்றார். அந்தத் தனிமை தேவையில்லாத கற்பனைகளையும் மாயத் தோற்றங்களையும் மனதில் வளர்த்து விட, புற உலகிலிருந்தும் உறவுகள் காட்டக் கூடிய பாச பந்தங்களில் இருந்தும் அந்த நோயாளி அந்நியப்படத் தொடங்குகின்றார்.

இறப்பதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கக் கூடும். ஆனாலும் இந்த உடலையும், உயிரையும் தாங்கி இந்தப் பூமிக்கு வந்ததற்கான அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அடுத்தவருக்கு அனுசரணையாக அன்பு காட்டி வாழ வேண்டும். வாழ நினைத்தால் வாழலாம். வழியா இல்லை பூமியில்? மண்ணை முட்டி மோதும் விதையே பெருவிருட்சமாகின்றது. போராடத் துணிந்து விட்டால் இந்த உலகமே ஒரு மலர்வனமாகமாறி விடும்.

# இப்போதைய காலச்சூழ்நிலை தீர்வுக்கு சாதகமே!

## செல்வம் அடைக்கலநாதன்

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களில் ஒருவரான செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவர். ஏறக்குறைய நாற்பது ஆண்டுகால அரசியல் அனுபவத்தைக் கொண்ட செல்வம், ஆயுதப் போராட்ட அரசியல், அதற்குப் பின்னர் உருவாகிய ஜனநாயக வழி அரசியல் இரண்டிலும் பங்கேற்றுக் கொண்டிருப்பவர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள பங்காளிக் கட்சிகளில் ரெலோவே இப்பொழுது துருத்திக்கொண்டு முன்னிலைப் பாத்திரத்தை வகிப்பதைக் காணலாம். இதற்கு அதனுடைய ஆயுதப் போராட்ட அனுபவங்களும் ஒரு காரணமாக இருக்கலாம். ரெலோவின் நடவடிக்கைகள் அண்மைக் காலமாகச் சற்று வேகமெடுத்திருக்கும் சூழலில் அதைப்பற்றிப் பேசுவதற்காகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த அழைப்புத் தொடர்பாகவும் 'எதிரொலி'க்காக செல்வம் அடைக்கலநாதனுடன் தொடர்பு கொண்டு உரையாடினோம்.**

**- அதிசயன்**

**கேள்வி: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க, வடக்கிலுள்ள தமிழ் அரசியல் தரப்பினரைப் பேச்சுக்கு அழைத்துள்ளதை ரெலோ வரவேற்றிருக்கிறது. மாவீரர் தின நிகழ்வுகளுக்கு இடமளித்தமை நல்லிணக்கத்துக்கு ரணில் காட்டிய சமிக்ஞை என்று கூறியுள்ளீர்கள். இதற்கமைய தமிழ்த்தேசியக் கட்சிகளில் பலவும் கூடிப் பேசியுள்ளபோதும், சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளனவே?**

**பதில்:** அவை நிபந்தனைகள் அல்ல. அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப் படக்கூடிய விடயங்களை நாங்கள் கோரிக்கையாக வரிசைப்படுத்தி உள்ளோம். இவை எதுவும் அரசாங்கத்தால் செய்ய முடியாத விடயங்கள் அல்ல. ஆகவே நல்லெண்ணக் கோரிக்கையாக அவற்றை தெரிவித்திருக்கிறோமே தவிர அவை நிபந்தனைகள் அல்ல.

**கேள்வி: விடுதலைப்புலிகளின் அரசியல் வழிமுறையைப் போல பேச்சுக்கு முன்பே நிபந்தனை விதிப்பது பொருத்தமா? நிபந்தனைகளை விதிக்க வேண்டாம் என்று ஜனாதிபதியும் கேட்டுள்ளாரே?**

**பதில்:** இதற்கு என்னுடைய மேற்கூறிய பதிலே பொருந்தும்.

**கேள்வி: சிவாஜிலிங்கம், கஜேந்திர குமார் போன்றோர் இந்தப் பேச்சுவார்த்தை ஒரு பொறி. ஏமாற்று நாடகம். ஆகவே இதை ஏற்க முடியாது என்று கூறுகிறார்களே?**







**பதில்:** அவர்கள் தொடர்ந்தும் இதைக் கூறி வந்திருக்கிறார்கள். இதைப் பொறியென்று கூறுகின்ற அவர்கள் தங்களுடைய தீர்வு பொதிகளையும் கடந்த காலங்களில் அந்தப் பொறிகளிடமே சமர்ப்பித்த வரலாற்றை நீங்கள் காண முடியும். நல்லாட்சி அரசாங்கத்திலும் கோத்தபாய ராஜபக்ச ஆட்சியிலும் புதிய அரசியல் யாப்பு என்று அழைத்த பொழுது இவர்கள் அங்கு சென்று தீர்வுத் திட்டங்களை முன் வைத்தவர்கள். ஆகவே அவர்கள் எதைப் பொறி என்று சொல்லுகிறார்களோ அதே இடத்திலேதான் தீர்வுகளை அவர்களே முன்வைக்கின்றார்கள். அவர்கள் செய்தால் சரி, மற்றவர்கள் செய்தால் தவறு என்ற மனநோயால் அவர்கள் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**கேள்வி: வடக்குத் தமிழ்த்தலைமைகளை அழைத்தாலும் தமிழ்த்தேசியத் தரப்புகள் வடக்கு-கிழக்கைப் பிரதிநிதித்துவம் செய்கின்றவையாகவே உள்ளன. ஆகவே இதை அதற்கமைய விரிந்த கண்ணோட்டத்துடன்தான் பார்க்க வேண்டும் என்பது சரி. ஆனால், வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிகளை இந்தப் பேச்சுகளில் அரசு தவிர்க்க முற்படுவதை தமிழ்த் தரப்புகள் எப்படிப் பார்க்கின்றன? தமிழ்த்தரப்பின் பொறுப்பு முஸ்லிம்களையும் இணைத்துச் செல்வதாக இருக்க வேண்டுமே?**

**பதில்:** முஸ்லிம்களை அரவணைத்துக் கொண்டே தீர்வை நாங்கள் எட்ட முடியும் என்பது போராட்ட காலத்தில் இருந்து எங்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது. ஆகவே அவர்களை விடுத்து ஒரு அரசியல் தீர்வை நாங்கள் ஒருபொழுதும் சிந்தித்ததில்லை. முஸ்லிம் தரப்புகளும் பொறுப்புணர்வோடு இணைந்து செயலாற்றுவதன் மூலமே இது சாத்தியமாகும்.

**கேள்வி: தமிழ்த்தரப்புகள் பொருத்தமான பொறிமுறையையும் கட்டமைப்பையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று ரெலோ தெரிவித்துள்ளமை வரவேற்கவேண்டியது. இந்தப் பொறிமுறை எப்படி அமைய வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

**பதில்:** இந்தப் பொறி முறையை அனைத்து தரப்பினரிடமும் கலந்துரையாடி உருவாக்கவே நாங்கள் கோரிக்கை விடுத்துள்ளோம். அரசியல் மாற்றங்கள், கட்சி மாற்றங்கள், பிரதிநிதித்துவ மாற்றங்களைத் தாண்டி தீர்வு திட்டம் என்பது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வரைக்கும் செயற்படுத்தக்கூடிய ஒரு பொறி முறையை நாங்கள் உருவாக்க முயல்கிறோம். இது கட்சி நலன்களை தாண்டி இன நலன் சார்ந்ததாக அமைய வேண்டும்.


**கேள்வி: இந்தப் பேச்சுகளில் இந்தியாவின் பங்களிப்பு என்னவாக இருக்கும்? சர்வதேச ஈடுபாடுகள் எப்படியானவை?**

**பதில்:** இந்தியாவின் தலைமையில் சர்வதேச நாடுகளுடைய பங்களிப்புடன் தீர்வு காண பேச்சுவார்த்தை மேற்பார்வை செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடு. அதுவே எமது தீர்வின் இறுதி இலக்கை அடைய வழி செய்யும்.

**கேள்வி: கூட்டமைப்பிலும் தமிழ்த்தேசிய அரசியற்பரப்பிலும் ரெலோ அண்மைக்காலமாக துடிப்போடு இயங்குவதாகத் தெரிகிறது. ஆனால் ரெலோவின் வேகத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்மைப்பின் பங்காளிக்கட்சிகள் இல்லை என்றும் தெரிகிறது. இந்த நிலையில் எதிர்காலத்தில் புதிய மாற்றங்கள், புதிய கூட்டுகளுக்கு வாய்ப்புண்டா?**

**பதில்:** இப்பொழுது உள்ள காலச் சூழ்நிலை தீர்வுக்கான சாதகமான நிலையை ஏற்படுத்தி இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இதை விரைந்து செயல்படுத்துவதே எங்களுடைய நோக்கம். அதனால்தான் பல விடயங்களை முன்னின்று செயற்படுத்த முயல்கிறோம். அங்கத்துவக் கட்சிகள் மாத்திரமல்ல தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் ஒன்றுதிரட்டி செயலாற்றும் வகையில் ஒரு தளத்தை ஏற்படுத்தி செயற்படுகிறோம்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருங்கிணைந்து - ஒருமித்து- செயற்படுவதை நீங்கள் அவதானிக்கலாம். புதிய கூட்டுகள் என்பதை விட தமிழ் தேசியக்







கூட்டமைப்பை மற்றவர்களும் ஒன்றிணைந்து பலப்படுத்துவதே இனத்துக்கு நலன் பயக்கும் என்பது எங்கள் நிலைப்பாடு.

**கேள்வி: விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தோரின் அரசியல் பார்வை, செயற்பாடுகளுக்கும் மிதவாத அரசியல் வழியில் வந்தோரின் பார்வை, செயற்பாடுகளுக்கும் இடையில் பெருத்த வேறுபாட்டைத் தொடர்ந்தும் காண முடிகிறது. இந்த நிலையில் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் எந்த வகையில் அமையக் கூடும்?**

**பதில்:** இந்த இடைவெளிகளை அவதானித்து அதை எதிர்கொள்ளும் முகமாகவே ஒருமித்த நிலைப்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செயலாற்றும் நிலைப்பாட்டை நாங்கள் முன்னெடுத்தோம். தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பொதுப் பிரச்சினைகளில் ஒருமித்துச் செயலாற்ற இணக்கம் கண்டிருந்தோம்.

அரசியல் தீர்வு சம்பந்தமான தீர்வுத் திட்டம், அதை எட்டுதல், நடைமுறைப் படுத்தல் என்பவற்றில் இந்த வேறுபாடுகளை களைந்து செயற்படவே ஒரு பொறிமுறையை நாங்கள் ஏற்படுத்த முயல்கிறோம். இந்தப் பொறி முறையானது வித்தியாசமான நிலைப்பாடுகளையும் இடைவெளிகளையும் நீக்கி தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ளவர்கள் ஒருமித்து அல்லது ஒன்றிணைந்து செயற்பட உதவும்.

**கேள்வி: இது போருக்குப் பிந்திய சூழல் (Post War Periot). அதற்கேற்ற அரசியல் முன்னெடுப்புகளே அவசியம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், தமிழ்த்தரப்பும் சரி, ஏனைய சிங்கள, முஸ்லிம் தரப்பினரும் சரி, போருக்கு முந்திய, போர்க்கால அரசியலைக் கலவையாகவே முன்னெடுப்பதைக் காண்கிறோம். இது பிரச்சினைகளை மேலும் வளர்த்துச் சிக்கலாக்குவதைப் பற்றி உங்களுடைய கருத்தென்ன?**

**பதில்:** போருக்குப் பிந்திய பிரதான நடவடிக்கையான பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிப் பொறிமுறை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை. நல்லிணக்கம், பொறுப்பு கூறல் மற்றும் மனித உரிமை விடயங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. ஆகவே போரின் தாக்கத்துக்கான நீதியை பாதிக்கப்பட்ட தரப்பாக கோருகின்ற பொழுது எங்களுடைய அரசியலிலும் போர்க் கால பிரதிபலிப்புகளைத் தவிர்க்க முடியாது. எப்போது போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான பரிகார நீதி எட்டப்படுகிறதோ அப்பொழுதே எங்கள் அரசியலிலும் அதனுடைய பிரதிபலிப்பு இல்லாத போகும்.

**கேள்வி: சர்வதேச சமூகம் போருக்குப் பிந்திய அரசியலை முன்னெடுக்குமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த போதிலும் அதற்கு நம் அரசியற் தரப்புகள் பின்னிற்பது ஏன்?**

**பதில்:** சர்வதேச சமூகமும் போரில் பாதிக்கப்பட்ட எமது இனத்துக்கு பரிகார நீதியைப் பெற்றுத்தர தவறி உள்ளமையை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்ட ஒரு இனம் அதற்கான பரிகாரத்தை எட்டாத சூழ்நிலையில் போருக்கு பிந்திய அரசியலை முன்னெடுக்க முடியாது என்பதை சர்வதேச சமூகம் நன்கு அறியும்.

**கேள்வி: இன்றைய சூழலில் புலம்பெயர் சமூகத்தின் பங்களிப்புகள் எப்படி அமைய வேண்டும்?**

**பதில்:** புலம்பெயர் சமூகமே எமக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு பலம். நாம் இங்கு ஒருமித்து முன்னெடுக்கக்கூடிய இனம் சார்ந்த நடவடிக்கைகளுக்கு பலம் சேர்க்கும் விதமாக அவர்கள் செயல்படுவதே இனத்துக்கு நன்மை பயக்கும். மாறாக சில புலம்பெயர் சக்திகள் தங்களுடைய கோரிக்கைகளை இங்கு முன்னெடுப்பதற்காக எமது அரசியல் சூழ்நிலைகளில் பிரிவினைகளைத் தோற்றுவிப்பது எமது இனத்துக்கு ஒருபோதும் நன்மை தராது.





# தமிழகத் தம்பியும்

**தமிழகத் தம்பி :** என்ன அண்ணே ! எதுவுமே சொல்லிக்காம சிலோனுக்கு 'குட்டி ட்ரிப்' ஒண்ணு அடிச்சிட்டு வந்திட்டீங்க போலயே?

**ஈழத்து அண்ணன்:** ஓமோம் அதான் இப்ப social media எல்லாம் விசிட் sri Lanka visit sri lanka எண்டு ஒரே promotion ஆ இருக்கு தானே ? அது தான் ஒருக்கா போயிட்டு வருவம் எண்டு... போனதும் வந்ததும் அவ்வளவும் தான்...

**தமிழகத் தம்பி :** அண்ணை சும்மா கதை விடுறீங்க இல்ல? நம்ம ஆஸ்திரேலிய டாலர் இப்ப அந்த ஊர்ல பயங்கரமா கூடிடிச்சி.. போன வருசம் 2000 டாலர் இலங்கையில செலவழிக்கிறதுக்கு பதிலா இந்த வருசம் 1000 டாலர் இலங்கையில செலவழிச்சு சோலிய முடிச்சிக்கலாம். அதானே?

**ஈழத்து அண்ணன்:** பரவால்லை தம்பிக்கு கற்பூர புத்தி தான். விலைவாசி அது இதெண்டு இலங்கையில எக்கச்சக்க பிரச்சினை. நான் இருந்த வீட்டுக்கு பக்கத்து வீட்ட இருந்த பெடியன் ஒருத்தன் விலைவாசியில இருந்து தப்புறதுக்கு ஒவ்வொரு ஐடியா வச்சிருக்கிறார்..

**தமிழகத் தம்பி :** ஓ... என்ன ideas ?

**ஈழத்து அண்ணன்:** இப்ப அவர் பிள்ளைக்கு பம்பஸ் வாங்கிற எண்டா ..

**தமிழகத் தம்பி :** ம்.. nappy

**ஈழத்து அண்ணன்:** அ.. ஆ .. நப்பி. அதை அவர் ஏதாவது சின்ன பார்மசி ல தான் போய் வாங்குவாராம்.. ஏனெண்டா சூப்பர் மார்க்கட்ல தான் அநேகமா சனம் உந்த நப்பிக்களை வாங்கும். பணவீக்கத்தில புதுசா வாற நப்பிக்கள் எக்கச்சக்கமான விலையா இருக்கும். சின்ன பார்மசில எப்படியும் இந்த மாதிரியான பழைய ஸ்டொக் பழைய விலையில இருக்குமாம்.

**தமிழகத் தம்பி :** நல்ல ஐடியாதாங்க.. இதைப்போல வேற ஐட்டங்களுக்கும் செய்யலாமே?

**ஈழத்து அண்ணன்:** செய்யிறார் ,செய்யிறார். வீட்டுக்கு போன கிழமை பெயிண்ட் அடிச்சவராம். பெயிண்ட் கொம்பனி ஏஜென்ட் எண்டு சொல்லி பெயிண்ட் விக்கிற கடையில பெயிண்ட் லீட்டருக்கு 2600 ரூபா எண்டா அதே பெயிண்ட் 6 மாசத்துக்கு முந்தி தயாரிச்சது சின்னா ஹார்ட் வெயார் கடையில 1200 ரூபாக்கு எடுக்கலாம்..

**தமிழகத் தம்பி :** அப்போ கெட்டுப்போகாத items க்கு இது ஓகே. ஆனா பழங்கள், மரக்கறிக்கு ?

**ஈழத்து அண்ணன்:** அடேய் தம்பி, உந்த விலைவாசி உச்சிக்கு போயிருக்கிற டைம்ல உதுகள சுப்பர்மார்கெட் ல வாங்க கூடாது. அவன் 2,3 மடங்கு வச்சு தான் எங்களுக்கு விக்கிறான்.. பக்கத்தில இருக்கிற சந்தைக்கு போய் உதுகளை வாங்க வேணும். சின்னச் சின்ன விவசாயிகளும் பயனடைகிற மாதிரி இருக்கும்.

**தமிழகத் தம்பி :** அண்ணே , 2023 ல ஒரு recession அதாவது உலகத்திலயே பொருளாதாரப் பிரச்சினை வரப்போகுதுன்னு பேசிக்கிறாங்க. so மொத வேலையா நீங்க எந்த கம்பெனிக்கு வேலை செஞ்சாலும் உங்க value வை அந்தக் கம்பெனிக்கு காட்டிடுங்க. ஏன்னா recession ன்ன ஒண்ணு வர முன்னாடியே கம்பெனீஸ் நெர்வஸ் ஆகியோரை வீட்டுக்கு அனுப்பலாம்னு தான் பார்க்கும்.

**ஈழத்து அண்ணன்:** இல்லாட்டி? வேலை முக்கியம் தானே? அது தானே காசை கொண்டு வரும்? அதைப்போல உந்த லோன் வட்டி எல்லாம் கண்டபடி கூடினதால எக்கச்சக்க செலவு.. கூட வட்டி இருக்குற லோனை முதல்ல அடைச்சிடவேணும்....

த .த : ஆமா, நிச்சயமாண்ணே. அதே மாதிரி திடீர்னு இந்த டைம்ல வர்ற மெடிக்கல் எக்ஸ்பென்ஸ் பத்தியும் கவனமா இருக்கணும். ஒரு sepcialist ம் சாதாரண GP ம் பல நோய்களுக்கு ஒரே மாதிரியான செக்கப்ஸ், ட்ரீட்மென்ட் தான் நம்ம கிட்ட சொல்லக்கூடும். ஆனா பாத்தீங்கன்னா அண்ணே, ஸ்ரீநஉயைடளைவ Xl price எங்கயோ உச்சத்தில இருக்கும்.

**ஈழத்து அண்ணன்:** ஆஸ்பத்திரியளும் இப்பிடித்தானே ? ஒரே நோய்க்கு அவையின்ர கட்டட அளவு, பணவசதிய பொறுத்து பில்லை போடீனம் . தம்பி செலவை குறைக்க இன்னொரு விசயம் ..

**தமிழகத் தம்பி :** என்ன அது!

**ஈழத்து அண்ணன்:** பேரம் பேசவேணும்..

**தமிழகத் தம்பி :** Interesting - பேரம் பேசவேணும்.. ம்.. சொல்லுங்கோ.

**ஈழத்து அண்ணன்:** இப்ப 8 மாசத்துக்கு முதல்ல எனக்கு வாடகை அக்ரீமெண்ட் முடிஞ்சுது. ரியல் எஸ்டேட் ஏஜென்ட் மூலம் போகேல்ல் அப்ப வீட்டுக்காரன் தான் எல்லாம். அவன் அடுத்த ஒரு வருசத்துக்கு கிழமைக்கு 450 டொலர் எண்டான். நான் 2 வருசம் எடுக்கிறன் நீ நிம்மதியா இருக்கலாம். 420 க்கு தாறியா எண்டு பேரம் பேசிப் பார்த்தன். கிடைச்சிட்டு.. இப்ப வட்டி எல்லாம் கூடினா பிறகு செக் பண்ணிப் பார்த்தா என்ர மாதிரியான வீடு 500 ல இருந்து 520 போகுது.

**தமிழகத் தம்பி :** செம அண்ணே ! கலக்கிடீங்க. செலவைக் குறைக்கிற மாதிரி இந்த பணவீக்க நேரத்தில வருமானத்தையும் கூட்டணும். அதாவது பணவீக்க வீதத்தை விட கூடின ரேட் ல வருமானம் வர்ற மாதிரியான சொத்துக்களில நாம முதலீடு செய்யணும்,.

**ஈழத்து அண்ணன்:** தங்கம் நல்ல சாமான் என்ன? அதெப்பிடியும் விலை கூடும் தானே?

**தமிழகத் தம்பி :** ஆமா ஆமா.. கடந்த 20 வருசத்துல தங்கம் சராசரியா 10% ஒவ்வொரு வருசமும் கூடியிருக்கு.. அது எப்பிடி நீங்க பார்த்தாலுமே பணவீக்க வீதத்தை விட கூட தான். இதை விட சநயட நளவயவந அப்புறம் sharemarket index funds இதுங்களையும் நாம முதலீடு செய்யலாம் இந்த மாதிரியான காலத்தில..

**ஈழத்து அண்ணன்:** அதாவது தம்பி, பணவீக்க வீதத்தை விட எங்களுக்கு கிடைக்கிற சநவரசெ கூடவா இருக்கவேணும்.. அது தானே?

**தமிழகத் தம்பி :** அதே தான். என்னோட ஸ்ரீலங்கன் நண்பர் ஒருத்தரு, ஸ்ரீலங்கால சில bank FDs 18% 20%,னு ரொம்ப கவர்ந்து இழுக்கிற மாதிரி இருக்கு. இதில இன்வெஸ்ட் பண்ணிக்கப்போறேன் அப்பிடின்னு சொன்னாரு. ஆனா என்னை கேட்டீங்கன்னா, Australian dollarsஐ மாத்தி அதில இன்வெஸ்ட் பண்ணிறத பத்தி யோசிக்கணும். ஏன்னா அந்த FD வட்டியை விட inflation கூடவா இருந்திச்சுன்னாலோ இல்லைன்னா சில காலத்தில Australian டொலர் value கூடும்போது ஸ்ரீலங்கன் ருப்பீ value கம்மியாயிடும். கடைசியா அந்த முதலீட்டை நீங்க வட்டியோட சேர்த்து திருப்பி Australian dollar க்கு மாத்தினா நட்டமா தான் முடியும்.

**ஈழத்து அண்ணன்:** ம்ம்.... இப்பிடி இங்க இருக்கிற கனபேருக்கு இப்ப ஸ்ரீலங்கால நடந்த பொருளாதாரப் பிரச்சினையால நடந்திருக்கு.

**தமிழகத் தம்பி :** ம்... சரி அண்ணே.. நான் கிளம்புறேன்.. இன்னொரு சுவாரஸ்யமான விஷயம் பத்தி அடுத்த வாட்டி பேசலாம்.



# ஈழத்து அண்ணாவும்

பெடியனும் கடியனும்

# நுகர்வோர் சட்டம்
# Consumer Law

**சட்டத்தரணி - த.நா.ஜெயராசசிங்கம்**

இவர் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட உதவி விரிவுரையாளர். பின்னர் பிரிட்டனில் சட்டம் பயிற்று சட்டத்தரணியாகத் தேர்ச்சி பெற்றவர். பின் ஆஸ்திரேலியா மொனாஷ் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்றார். அதன் பின்னர் ஆஸ்திரேலியா விக்ரோறியா மாநிலத்தில் வழக்கறிஞராகத் தகுதிபெற்றவர். தற்போது சட்டம் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்.

கைத்தொழில் மயமாக்கலுக்கு முன்னர் ஒரு பொருளை வாங்குபவர் அதனை நேரில் பரிசோதித்து (Inspect) அதன் தரத்தை மதிப்பிட்டு வாங்கக் கூடியதாக இருந்தது.

எனினும் கைத்தொழில் மயமாக்கலின்பின் (Industrialisation) இந்த நிலை மாறிவிட்டது.

நுகர்வோர் பல வகையான பொருட்களைப் பெருமளவில் கொள்வனவு செய்யக்கூடிய நிலையும் அவற்றைப் பரிசோதித்து அறியக் கூடிய வாய்ப்பும் குறைவாக மாறிவிட்டது.

'நுகர்வோர் கவனமாக இருக்க வேண்டும்' என்பது நுகர்வோர் சட்டத்தில் அடிப்படை அம்சமாகும்.

இது லத்தீன் (Latin) மொழியில் Cavert emptor என அழைக்கப்படும்.

எனவே சந்தை, பொருட்களின் அளவு, அவை பரிமாறப்படும் புவியியல் தூரங்கள் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு சட்டமும் நிலைமைக்கு ஏற்ப மாறும் மாற்றப்படுகின்றது.

சில பொருட்களின் தொழில்நுட்பத்தை நுகர்வோர் விளங்கிக் கொள்ள முடியாமையும் உண்டு.

மேலும் நாம் ஒவ்வொரு தடவையும் ஒரு பொருளை வாங்கும்போது நாம் ஒரு ஒப்பந்தம் ஒன்றில் இணைகின்றோம் (Contract). ஒரு ஒப்பந்தத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சியினர் இருப்பர்.

உதாரணமாக நாம் ஒரு மோட்டார் கார் ஒன்றை வாங்குகின்றோம் என்றால் மோட்டார் காரின் சொந்தக்காரர் காரை எமக்கு கொடுப்பதற்கும், நாம் அந்தக் காரின் பெறுமதிக்கு பணத்தைக் கொடுப்பதற்கும் இணங்கி ஒரு ஒப்பந்தத்தில் (Contract) இணைகின்றோம்.

இதேபோன்று நாம் ஒரு சேவையை பெறும் போது அந்தச்சேவையை நமக்கு வழங்குபவர்களுக்கு நாம் அந்தச் சேவையின் பெறுமதியை பணமாக வழங்குகின்றோம்.

நுகர்வோரின் நன்மைகருதி சட்டம் சில பாதுகாப்புக்களை நுகர்வோருக்கு வழங்குகின்றது.

ஒரு ஒப்பந்தம் 'எழுதப்பட்டோ' அன்றி 'வாய்ச்சொல் மூலம்' ஏற்படுத்தப்பட்டோ இருக்கலாம். சட்டம் அந்த ஒப்பந்தத்தில் சில உட்கிடையான (Implied) நிபந்தனைகளை (Conditions) விதிக்கின்றது.

இந்த உட்கிடையான நிபந்தனைகள் என்ன என்பதைப் பார்ப்போம்.

1. முதலாவது உட்கிடையான நிபந்தனை (Implied condition), விற்கப்படும் பொருள் என்ன தேவைக்காக கொள்வனவு செய்யப்படுகின்றதோ அத் தேவைக்கு பொருத்தமானதாக அமைய வேண்டும். இது ஆங்கிலத்தில் Fit for the Purpose என அழைக்கப்படும்.

உதாரணமாக நாம் ஒரு பொருளை குறிப்பிட்ட தேவைக்காக வாங்குகின்றோம் என விற்பனையாளருக்கு (Seller) சொல்கின்றோம்.

அவர் அப்பொருள் குறிப்பிட்ட நமது தேவையைப் பூர்த்தி செய்யும் என வாக்குறுதி அளித்து எமக்கு விற்கின்றார். ஆனால் நாம் அப்பொருளை உரிய தேவைக்கு பயன்படுத்த முடியாமல் போனால் நாம் அந்த விற்பனையாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

2. இரண்டாவதாக உட்கிடையான நிபந்தனை என்னவெனில் ஒரு பொருள் விற்கப்படும் தரத்தினை (Merchantable Quality) உடையதாக இருத்தல் வேண்டும்.

3. மூன்றாவதாக ஒரு பொருள் 'மாதிரி' யைக் காட்டி விற்பனை செய்யப்படும் போது, அப்பொருள் 'மாதிரி' யான பொருளை ஒத்ததாக அமைதல் வேண்டும்.

4. நான்காவதாக ஒரு பொருள் 'விவரணம்' மூலம் விற்கப்படும் போது அப்பொருள் விவரணத்தில் (Deescription) விபரிக்கப்பட்டபடி அமைதல் வேண்டும்.


மேற்குறிப்பிட்ட நான்கு உட்கிடையான நிபந்தனைகள் ஒரு பொருளை விற்கும் ஒப்பந்தத்தில் பொதுவாகக் காணப்படும்.

இந்த நிபந்தனைகள் மீறப்பட்டால் நாம் விற்பனையாளருக்கு எதிராக (Seller) சில நடவடிக்கைகளை எடுக்கலாம்.

முதலாவதாக நாம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட ஒன்றையேனும் அந்தப் பொருள் மீறியிருப்பதைக் கண்டறிந்தால், எனின் நாம் அதனை விற்பனையாளருக்கு (Seller) தெரியப்படுத்த வேண்டும் (Inform the seller).

இதுமிகவும் முக்கியமான நடவடிக்கையாகும்.

# மொழிப்போர்:




# மனக்குமுறல் தற்கொலையாக உருமாறிய தருணம்

அ.முத்துக்கிருஷ்ணன்

தமிழகத்தின் சேலம் மாவட்டம் மேட்டூர் அருகில் உள்ள தாழையூரில் தி.மு.க. கட்சி அலுவலகத்தின் முன்னால், தங்கவேல் என்கிற 85 வயது பெரியவர் உடலில் பெற்றோல் ஊற்றி, தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். ஓர் எளிய விவசாயியான தங்கவேல் தி.மு.க.-வின் தீவிர கொள்கைப் பிடிப்புள்ள உறுப்பினர், நங்கவள்ளி முன்னாள் ஒன்றிய விவசாய அணி அமைப்பாளராக பதவி வகித்துள்ளார். கடந்த 40 ஆண்டுகளாக தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களில் பங்குபெற்றுள்ளார், பல முறை சிறை சென்றுள்ளார்.

2014 இல் மத்தியில் பா.ஜ.க. ஆட்சிப் பொறுப் பேற்றது முதல் தொடர்ந்து ஹிந்தி மொழியை பல்வேறு வகைகளில், ஹிந்தி பேசாத மாநிலங்களின் மீது திணித்து வருகிறது. தமிழக முதலமைச்சராக ஸ்டாலின் பொறுப்பேற்றது முதலே இம்மாதிரியான திணிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகிறார்.

ஹிந்தித் திணிப்பு பல்வேறு வகைகளில் அழுத்தமாக நடைபெற்று வருகிறது. தமிழகத்தில் உள்ள வங்கிகள், நமக்கு வழங்கப்படும் பலவித படிவங்கள், மத்திய அரசு வழங்கும் அடையாள அட்டைகள், ரயில் பயணச்சீட்டு தொடங்கி நம் குழந்தைகள் பயிலும் பள்ளிகள் வரை எங்கும், எதிலும் ஹிந்தியை திணிப்பதில் மத்திய அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது, அது மட்டுமின்றி பா.ஜ.க. கட்சி தலைவர்கள் முதல் அமைச்சர்கள் வரை பலர் தொடர்ச்சியாக ”ஹிந்தி தெரியவில்லை எனில் நாட்டை விட்டு வெளியேறுங்கள்” என்று ஹிந்தி மொழி அறியாதவர்களை இரண்டாம் பிரஜைகள் போல் நடத்தும் போக்கு அதிகரித்து வருகிறதை இந்தியாவில் வாழும் எவரும் அறிந்து கொள்ளலாம்.

ஹிந்தி மொழியை ஒட்டு மொத்த இந்தியாவின் மொழியாக மாற்றிவிடும் முயற்சி நெடுங்காலமாகவே நடைபெற்று வருகிறது. தமிழகம் ஹிந்தித் திணிப்பை எதிர்த்து 1938, 1965, 1986 ஆண்டுகளில் மூன்று தன்னெழுச்சியான வரலாற்று பேரலைகளைச் சந்தித்துள்ளது.

1937 இல் மதராஸ் மாகாணத்தின் பிரதமராக இருந்த ராஜாஜி, பதவியேற்ற ஒரே மாதத்தில் அமைச்சரவையைக் கூட கலந்தாலோசிக்காமல் ’இனி 125 பள்ளிகளில் ஹிந்தி கட்டாயப் பாடமாக இருக்கும்’ என்று அறிவித்தார். ஆயிரக்கணக்கான தொண்டர்கள் சிறை நிரப்பும் போராட்டத்தில் ஈடுபட்டனர், பெரியார் கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் கடுங்காவலில் சிறைவைக்கப்பட்டார். நடராசன் மற்றும் தாளமுத்து சிறையில் இறந்த செய்தி தமிழகம் எங்கும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது, இருப்பினும் இத்தனை நெருக்கடியான சூழலிலும் ராஜாஜி தலைமையிலான அமைச்சரவை பதவி விலகும் வரை ஹிந்தித் திணிப்பில் பிடிவாதமாக இருந்தது. பின்னர் 1940 இல் ஆங்கிலேய அரசு ’ஹிந்தி இனி கட்டாயப் பாடம் இல்லை’ என அறிவித்தது.

ஜவகர்லால் நேரு உயிருடன் இருந்த வரை ஹிந்தியை ஆட்சிமொழியாக்க இசையவில்லை, அவரது இறப்புக்கு பின் மீண்டும் 1965ல் ஹிந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. ’ஆங்கிலம் படிப்படியாக இனி நீக்கப்படும். மத்திய அரசின் சட்டங்கள், ஆணைகள், கட்டளைகள் என அனைத்தும் ஹிந்தியில் மட்டுமே வெளியிடப்படும்’ என்கிற அவர்களின் ஆணவம் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஹிந்தியில் மட்டுமே என்கிற அறிவிப்பு வரை சென்றது. இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைக் காட்டி, மத்திய அரசு போராடுகிறவர்களை மிரட்டியது. தமிழகம் எங்கும் கட்டுக்கடங்காத போராட்டங்கள். கலைஞர் கருணாநிதி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் காமராஜர் மத்திய அரசின் முடிவுகளை விமர்சித்து பேசினார், குடியரசுத் தலைவர் எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள் ஹிந்தி பேசாத மக்கள் மீது ஹிந்தியைத் திணிக்க வேண்டாம், ஆங்கிலம் அலுவல் மொழியாகத் தொடரும் என்று அறிவித்தார்.

1986 ஆம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தி இந்தியாவில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களுக்கு இனி புது தில்லியில் இருந்து வரும் கடிதங்கள் ஹிந்தியில்தான் வரும் என்றார். நவோதயா பள்ளிகள் இனி இந்தியா முழுவதும் தொடங்கப்படும் அதில் ஹிந்தி கட்டாயப்பாடமாக இருக்கும் என்றும் அறிவிப்புகள் வெளிவந்தன. இதே 1986 இல் மதுரைக்கு வந்த மத்திய அரசின் அதிகாரிகள் ஒரு கூட்டத்தின் மேசையில் இருந்த பெயர்ப் பலகைகளில் ’ஏன் ஹிந்தியில் எழுத்துக்கள் இல்லை?’ என அவைகளை தூக்கி எறிந்தனர். இந்தச் சிறு பொறி மீண்டும் பெரும் நெருப்பாக பற்றிக் கொண்டது. உடனடியாக தி.மு.க. ஹிந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகளை நடத்தியது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17 ஆவது பகுதியின் 343 ஆவது பிரிவின் நகலை பொது இடங்களில் எரிப்பது என்று முடிவு செய்தது. உருவப் பொம்மைகள் எரிப்பு முதல் அஞ்சலகத்தில் குண்டு வெடிப்பு என இந்தமுறை போராட்டம் தமிழகமெங்கும் பெருநெருப்பாகப் பற்றிக் கொண்டது.

பேராசிரியர் அன்பழகன் தலைமையில் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 17-ஆவது பிரிவை தீயிட்டு கொளுத்தும் நிகழ்வு நடைபெற்றது. கலைஞர் உள்ளிட்ட தி.மு.க.வின் தலைவர்கள் அனைவரும் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் சிறை சென்றனர். இந்ப்த போராட்டங்களில் பங்கு கொண்ட தி.மு.க.வின் 10 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் பதவிகளை இழந்தார்கள்.

ஒரு மொழியின் திணிப்பை எதிர்த்து தமிழர்கள் மட்டும்தான் போராடி வருகிறார்களா என்றால் இல்லை என்பதே பதில். உலகம் முழுவதும் தங்களின் தாய்மொழியை பாதுகாக்க பெரும் போராட்டங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. அயர்லாந்தில் ஐரிஷ் மொழிக்காகவும், வேல்ஸில் வெல்ஸ் மொழிக்காகவும், நியுசிலாந்தில் மாவோரி மொழிக்காவும், ஆஸ்திரேலியாவில் அபார்ஜின மொழிகளுக்காகவும் என நூற்றுக்கணக்கான போராட்டங்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. போராடிய மொழிகள் மட்டுமே எஞ்சியுள்ளன என்கிற வரலாற்று உண்மையை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சீனாவில் பத்து மொழிக் குடும்பங்களைச் சேர்ந்த 302 மொழிகள் பேசப்பட்டன, சீனாவின் கம்யூனிஸ்ட் அரசு ஒற்றை மாண்டரின் மொழியை அனைவர் மீதும் திணித்து அங்குள்ள ஏராளமான மொழிகளை வழக்கொழியச் செய்துவிட்டது என்பது சமீபத்திய வரலாறு. ஐரோப்பா முழுவதிலும் தமிழகத்தை விட அளவு சிறியதாகவும், நம்மில் பத்தில் ஒரு பங்கு மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு நாடும் அவர்களின் தாய் மொழியை ஆட்சி மொழியாக, நீதிமன்ற மொழியாக, பயிற்று மொழியாக நேசிக்கிறார்கள்.

அன்றைக்கு ராஜாஜியிடம் “ஏன் ஹிந்தி?” என்று கேட்டதற்கு, ஹிந்தியைக் கற்றுக்கொண்டால்தான் தென்னிந்தியர்கள் வட இந்தியர்களை சரியாகப் புரிந்து கொள்ள இயலும் என்றார், இன்றும் கூட “பானி பூரி விற்பவரிடம் வாங்கி சாப்பிட உதவும்” என்பதைத் தாண்டிய விளக்கங்கள் வரவில்லை. ஹிந்தி மொழி நம்மீது ஏன் திணிக்கப்படுகிறது என்கிற கேள்வி எழவே செய்கிறது. ஹிந்தி மொழி குறித்த வட இந்தியத் தலைவர்களின் உரைகளை கேட்டால் அதில் ஆதிக்கம் ஒன்றே நோக்கம் என்பது விளங்கும்.

இந்தியாவை ஒரு காலனியாக நிர்வகிக்க ஆங்கிலத்தைப் புகுத்தினார்கள், ஆனால் கொடுவாய்ப்பாக அந்த மொழி உலக அளவிலான அறிவியலின், தொழில்நுட்பத்தின், வளர்ச்சியின் மொழியாக இருந்ததால் இந்தியாவும் தமிழகமும் இத்தனை பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளன.

இன்றைக்கு அலை அலையாக தமிழகம் நோக்கி வரும் வட மாநிலத்தவர்களைப் பார்க்கும் போது வட மாநிலங்கள் அனைத்திலும் தமிழைத் துணைப் பாடமாக வைத்தால் அது அவர்களின் எதிர்காலத்திற்கு நலம் பயக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. தமிழர்கள் வேலை தேடி மத்திய கிழக்கு நாடுகள், ஐரோப்பா, அமெரிக்கா, சிங்கப்பூர் என பயணப்படுவதால் இங்கே பள்ளிகளில் தாய் மொழி தவிர்த்து அராபிக், பிரெஞ்ச், ஜெர்மன், ஸ்பானிஷ், மாண்டரின் ஆகிய மொழிகளைக் கற்றுக் கொண்டால் இவர்களின் வேலையிடங்களிலும் வாழ்விலும் சுலபமாக கைக்கொள்ள இயலும் என்பதுதான் காலம் காட்டுகிற திசைவழி.

பேசும் மொழியும் எழுதப்படும் வார்த்தைகள் யாவையும் ஒரு கலை வடிவமே. அதில் ஒரு மக்கள் கூட்டத்தின் விழுமியங்கள், மதிப்பீடுகள் தலைமுறை கள் கடந்து கடத்தப்பட்டு வருகின்றன, ஒரு மொழி அழியும் போது ஒரு பண்பாடும் சேர்ந்தே அழியும்.

இந்தச் சூழலில் தான் தங்கவேல் அவர்கள் கட்சி அலுவலகத்தில் இருந்த பலகையில், மத்திய அரசே மோடி அரசே ஹிந்தியைத் திணிக்காதே, தாய்மொழி தமிழ் இருக்க கோமாளி மொழி ஹிந்தி எதற்கு?” என எழுதிவிட்டு, அதேகையுடன் அங்கேயே தன் மீது நெருப்பிட்டு தானும் நெருப்பாக மாறியுள்ளார்.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# வெளிவந்த க.பொ.த (சா/த) பெறுபேறுகள்

# எண்ணிமக் கல்விக்கு நம்பிக்கையூட்டுகின்றதா?



குமாரவேலு கணேசன்


இலங்கையில் வருடாந்தம் நடாத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திற்கான பரீட்சையின் முடிவுகள் கடந்தவாரம் வெளிவந்தது தெரிந்ததே. 2021 டிசம்பரில் நடாத்தப்பட்டிருக்க வேண்டிய இப்பரீட்சை கோவிட் நோய்ப்பரவல் காரணமாக 2022 மே மாதம் முதல் ஜூன் மாதம் வரை நடாத்தப்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் 50% ஆன நாட்களே பாடசாலைக்கு சமுகமளிக்க கூடியதாகவிருந்தது.

இப்பரீட்சை முடிவுகளின்படி உயர்தரத்திற்கு தகுதிபெறும் மாணவர்களின் சராசரி வீதம் 2020 ஆம் ஆண்டு 76.6 % ஆகவிருந்து 2021 ஆம் ஆண்டு 74.5 % ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. அதாவது இங்கு உயர்தரத்திற்கு தகுதியென்பது தாய்மொழிச் சித்தியுடன் ஆகக்குறைந்தது 3C, 2S சித்திபெற்றவர்களைக் குறிக்கும். கணிதம் கட்டாயப்பாடமாக இருந்தாலும் இந்தக்கணிப்புக்கு கணித சித்தி கருத்திற்கொள்ளப்படுவதில்லை என்பது ஒரு விசித்திரமாகும்.

கிழக்கு மாகாணத்தையும் வடமாகாணத்தையும் தவிர அனைத்து மாகாணங்களின் சித்திவீதங்களும் முதல் வருடத்துடன் ஒப்பிடும்போது பெருமளவில் வீழ்ச்சியை சந்தித்துள்ளன. தென் மாகாணமும், மேல் மாகாணமும் மாத்திரமே தேசிய சராசரியான 74.5 % இற்கும் மேலான சித்திவீதங்களை பெற்றுள்ளன.

கீழே தரப்பட்டுள்ள சலாகை வரைபில் 9 மாகாணங்களும் கடந்த 6 வருடங்களில் பெற்ற அடைவுகள் தரப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு, கிழக்கு மாகாணத்தின் அடைவு வீதம் 61.5% வீதமாக 2016இல் இருந்து படிப்படியாக முன்னேறி, 74% அடைவை 2021ஆம் ஆண்டில் பெற்று நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. இக்காலப்பகுதியில் மூன்றுக்கும் மேற்பட்ட கல்விப்பணிப்பாளர்கள் அங்கு பணியாற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. வட மாகாணம் 2016ஆம் ஆண்டு முதல் 9 மாகாணங்களுக்குள்ளுல் இறுதியாக இருந்து வந்தது மாத்திரமல்லாமல் அதன் வளர்ச்சி வீதமும் பெரிதாக இல்லை என்பதை இவ்வரைபில் பார்க்கலாம். வடமேல் மாகாணமும், வட மத்திய மாகாணமும் இந்த கோவிட் தொற்றுக்கால கல்வியில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளதனால் வடமாகாணம் 7வது இடத்திற்கு முன்னேறியுள்ளது தெளிவாக தெரிகின்றது.




வடமாகாணத்தின் வலயரீதியான அடைவுகளை ஒப்பிட்டுப்பார்த்தால் கிளிநொச்சி வடக்கு, கிளிநொச்சி தெற்கு வலயங்கள் முறையே 9.9%, 8.5% சித்திவீத அதிகரிப்பை பெற்றுள்ளன. வடமாகாணத்தில் மிக மோசமான நிலையில் இருந்துவரும் தீவக கல்வி வலயம் 6% சித்திவீத அதிகரிப்பை பெற்றுள்ளது ஆறுதலளிக்கின்றது. வவுனியா வடக்கு, வலிகாமம், துணுக்காய் கல்வி வலயங்கள் 4%-5% வரையான அடைவு அதிகரிப்பை பெற்றுள்ளன. யாழ்ப்பாணம், மன்னார், மடு, கிளிநொச்சி வடக்கு ஆகிய கல்வி வலயங்கள் தேசிய சராசரியான 74.5% சித்திவீதத்திற்கும் அதிகமாக பெற்று மாகாணத்தில் முதல் நான்கு வலயங்களாக திகழ்கின்றன. இவ்வலயங்களின் முன்னாள், இந்நாள் வலயக்கல்விப்பணிப்பாளர்களின் பணிகள் பாராட்டப்படவேண்டும். கீழ்வரும் அட்டவணை வடமாகாணத்தின் 13 கல்வி வலயங்கள் 2020ஆம் ஆண்டிலும், 2021 ஆம் ஆண்டிலும் பெற்ற சித்திவீதங்களையும், அவற்றில் ஏற்பட்ட மாற்றங்களையும் தருகின்றது. .

| Zone | GCE(O/L)-2021 Qualified for A/L % | GCE(O/L)-2020 Qualified for A/L % | Increase % |
|---|---|---|---|
| Kilinochchi North | 75.72 | 65.79 | 9.93 |
| Kilinochchi South | 74.30 | 65.79 | 8.51 |
| Islands | 63.30 | 57.28 | 6.02 |
| Vavuniya North | 73.48 | 68.46 | 5.02 |
| Valikamam | 67.79 | 63.37 | 4.42 |
| Thunukkai | 68.35 | 64.13 | 4.22 |
| Thenmarachchi | 72.15 | 70.31 | 1.84 |
| Jaffna | 76.93 | 75.1 | 1.83 |
| Vadamarachchi | 74.08 | 72.96 | 1.12 |
| Mannar | 76.16 | 75.06 | 1.10 |
| Vavuniya South | 70.02 | 69.75 | 0.27 |
| Madhu | 75.73 | 75.86 | -0.13 |
| Mullaitivu | 70.33 | 71.44 | -1.11 |


கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பு மாவட்ட கல்வி வலயங்கள் இம்முறை சிறந்த அடைவுகளை பெற்றுள்ளதை கீழ்வரும் அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது. முக்கியமாக, மட்டக்களப்பு கல்வி வலயம் (நகர்சார் பாடசாலைகளை உள்ளடக்கியது), மட்டு-மேற்கு கல்வி வலயம் (மிகவும் பின்தங்கிய படுவான்கரை பிரதேச பாடசாலை களை உள்ளடக்கியது) என்பன முறையே 12.2%, 8.9% சித்திவீத அதிகரிப்பை பெற்று சாதனை படைத்துள்ளன. மட்டக்களப்பு கல்வி வலயம் இலங்கையில் உள்ள 100 கல்வி வலயங்களில் முதலாவதாக வந்து சாதனை படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி ஆகிய நிலத்தால் தொடர்பற்ற முஸ்லீம் கிராமங்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட, மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகப்பெரிய கல்வி வலயமான மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் 4% அதிகரிப்புடன் 80% சித்திவீதத்தை பெற்றுள்ளதுடன் 10ஆவது இடத்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை மூதூர் கல்வி வலயம் 69.6% சித்திவீத அடைவுடன் முன்னிலையில் இருந்தாலும் மற்றைய திருகோணமலை மாவட்ட வலயங்கள் மிக பின்தங்கிய நிலையிலுள்ளன. முக்கியமாக கந்தளாய், திருகோணமலை வடக்கு வலயங்கள் முறையே 99, 100 ஆவது இடத்தைப்பெற்றுள்ளமை மிக வருத்தமளிக்கின்றது.

| Zone | GCE(O/L)-2021 Qualified for A/L % | GCE(O/L)-2020 Qualified for A/L % | Increase % |
|---|---|---|---|
| Batticaloa | 87.01 | 74.83 | 12.18 |
| Batticaloa West | 74.14 | 65.36 | 8.78 |
| Dehiattakandiya | 78.36 | 73.82 | 4.54 |
| Batticaloa Central | 80.30 | 76.23 | 4.07 |
| Paddirippu | 72.77 | 68.93 | 3.84 |
| Kalkudah | 70.66 | 67.08 | 3.58 |
| Kinniya | 64.79 | 61.47 | 3.32 |
| Trincomalee North | 60.84 | 59.17 | 1.67 |
| Sammanthurai | 70.94 | 69.42 | 1.52 |
| Kalmunai | 76.28 | 76.63 | -0.35 |
| Ampara | 76.22 | 77.15 | -0.93 |
| Muttur | 69.57 | 70.54 | -0.97 |
| Trincomalee | 67.52 | 68.56 | -1.04 |
| Akkaraipattu | 77.41 | 80.26 | -2.85 |
| Thirukkovil | 73.62 | 76.87 | -3.25 |
| Mahaoya | 72.43 | 76.83 | -4.40 |
| Kanthale | 63.27 | 67.91 | -4.64 |

நாடளாவிய ரீதியில் 100 வலயங்களையும் ஒப்பு நோக்கினால், தேசிய சராசரியான 74.5% இற்கும் அதிகமான அடைவை 6 கிழக்கு மாகாண வலயங்களும், 4 வட மாகாண வலயங்களும் பெற்றுள்ளன. இறுதி 10 இடங்களில் நான்கை கிழக்கு மாகாணமும், இரண்டை வடமாகாணமும் பெற்றுள்ளதை கீழ்வரும் சலாகை வரைபு தெளிவாக காட்டுகின்றது.

மலையகத்தைப் பொறுத்தவரையில் மத்தியமாகாணத்தில் ஹட்டன், நுவரெலியா, வலப்பனை ஆகிய கல்வி வலயங்களில் தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்தாலும் சரியான புள்ளிவிபரங்கள் இல்லாமல் அவர்களின் அடைவை தனியே பிரித்தெடுத்து பகுப்பாய்வு செய்வது சாத்தியமில்லை. இவை தவிர இரத்தினபுரி, கேகாலை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் பெருமளவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.




பாடசாலைகள் மூடப்பட்டு ஊரடங்கு அமுல்படுத்தப் பட்ட காலத்தில் எண்ணிம (Digital) தொழில்நுட்பமே ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கைகொடுத்தது என்றால் மிகையாகாது.

முக்கியமாக வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் கோவிட் காலப்பகுதியில் மாணவர்களுக்கான கல்வியை வட்சப், வைபர், டெலிகிராம், இமெயில், ஜூம், விரலிகள் போன்ற எண்ணிம தொழில்நுட்பங்களின் ஊடாக வழங்கி தடங்கலில்லாத கல்விக்கு வழிவகுத்ததன் மூலம் இந்த முன்னேற்றத்தை சாதித்துள்ளன. யாழ் இந்துக்கல்லூ ரியின் இணையவழி வகுப்புக்களை தென்னிலங்கை மாணவர்கள் கூட உபயோகிக்கக்கூடியதாகவிருந்தது ஒரு பாரிய கல்விப்புரட்சியென்றே கூறவேண்டும். வாகரை யானைக்காட்டுக்கு மத்தியில் இருந்த பாடசாலைக்கு மெல்பேர்னில் இருந்து ஒரு ஆசிரியர் கணிதம் கற்பித்து அனைவரும் சிறப்புச்சித்தி பெற முடிந்தது. பல பாடசாலைகளுக்கு வெளிநாடுகளில் இருந்து ஆங்கிலம் கற்பிக்க முடிந்தது. பல கல்வி வலயங்கள் ஜூம் மூலம் கல்வி கற்பித்தன. இதற்கான நிதியுதவிகளை தொண்டு நிறுவனங்களும் பழைய மாணவர் அமைப்புகளும் வழங்கியுதவியதை காணக்கூடியதாகவிருந்தது.

தமிழ் பேசும் பிரதேசங்களில் காணப்படும் ஆசிரியர் தட்டுப்பாடும் இப்படியான மோசமான சித்திவீதங்கள் பெறப்படுவதற்கான காரணங்களில் ஒன்றாக கூறப்படுகின்றது.

கிழக்கு மாகாணம், மத்திய மாகாணம், சப்பிரகமுவா மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றில் கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர்களின் தட்டுப்பாடு பாரிய அளவில் காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட 400 கணித ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி பிள்ளைநாயகம் அண்மையில் தெரிவித்திருந்தார். உயர்தரத்திற்கு தகுதி பெறுவதற்கு கணித சித்தியென்பது கட்டாயமானது என்பதை கவனிக்கவேண்டும்.

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் 5000 இற்கும் மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவேண்டுமாயினும் ஆசிரியர்களை புதிதாக இணைத்துக்கொள்ள இதுவரை எந்தத் திட்டமும் இல்லை என்பதே உண்மை. இந்த நிலையில் ஆசிரியர்களுக்கு மாற்றீடாக எண்ணிமக்கல்வி வளங்களை உபயோகித்து நிலைமை மேலும் மோசமடையாமல் காப்பதே தற்போதுள்ள ஒரே வழியாகும்.



# போகலாம் வாங்க போண்டாய்க்கு


**நெ செ பரத்**

அடி ஆத்தாடி” என்ற இளையராஜா பாடல்தான் நினைவுக்கு வந்தது, இந்தக் கடலோரக் கரைகளை (கவிதைகளை) பார்க்கும்போது. இம்முறை நாம் வந்திருக்கும் இடம், போண்டாய் பீச் (கடற்கரை). சிட்னிக்கு புலம்பெயர்ந்த நாட்களில் நான் இந்தக் கடற்கரையின் பெயரை “போண்டி” என்று உச்சரித்ததை நினைக்கையில் சிரிப்பு வருகிறது. சிட்னிக்கு மட்டும் அல்லாது ஒட்டு மொத்த ஆஸ்திரேலியாவுக்கே ஒரு தனி மகுடம் இந்த போண்டாய் கடற்கரை என்பதில் ஐயம் இல்லை. சிட்னியின் மையப்பகுதிக்கு கிழக்கே சுமார் 7 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இந்த போண்டாய் கடற்கரை சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம்.

இதென்னப்பா விசித்திரமான பெயர் என்று உங்களை போல நானும் முதலில் நினைத்ததுண்டு. போண்டாய் என்னும் பெயர் “பூண்டாய்” என்ற ஆஸ்திரேலியப் பழங்குடிச் சொல்லிருந்து தோன்றியதாகும். இந்த சொல் கடலில் உலவுவதை (Surfing) குறிக்கிறது. அதே சமயம் ஆஸ்திரேலிய அருங்காட்சி குறிப்புக்கள் போண்டாய் என்ற பெயருக்கு போண்டாய் வகை கம்புகளை வைத்து சண்டையிடும் இடம் என்றும் பொருள் சூட்டுகிறது .

இந்தக் கடற்கரையில் காலை வைத்தவுடன் சிறு வயது ஞாபகங்கள் எட்டிப்பார்த்தன. பெற்றோர் கையைக் கெட்டியாகப் பிடித்தபடி கடல் அலையில் கால் நனைத்த நாட்களை எண்ணி மனம் சிலாகித்தது. சற்று ஆழம் நோக்கி நடந்தால் அலறும் “அம்மாவின் சத்தம்” இல்லாதது மட்டும் தான் ஒரே குறை. இளம் சூரியன் எங்கள் மேல் லேசாக பட, புலர்ந்தது பொழுது மட்டும் அல்ல எங்கள் மனங்களும் தான். பிறை வடிவில் உள்ள இந்தக் கடற்கரைக்கு மேலும் மெருகு சேர்த்தன. அதனைச் சுற்றி உள்ள கடைகளும் குடியிருப்பு பகுதிகளும்.



கடலின் அழகை ரசித்தபடி நண்பர்களுடன் நடக்கையில் வரலாற்றை புரட்டிப்பார்த்தோம் நாம். 1851-இல் எட்வர்ட் ஸ்மித் ஹால் மற்றும் பிரான்சிஸ் ஓ’பிரைன் இந்த கடற்கரையை சுற்றி உள்ள 200 ஏக்கர் நிலத்தை வாங்கினர். முதலில் இந்தப் பகுதிக்கு ஓ’பிரைன் எஸ்டேட் என் பெயர் சூட்டப்பட்டது அதோடு இந்த கடற்கரை பொதுமக்கள் வந்து ரசிக்கும் இடமாக அறிவிக்கப்பட்டது. சிறிது ஆண்டுகள் கழித்து, பொதுமக்களுக்கான பார்வையிடும் அனுமதியை மறுக்க உரிமையாளர்கள் முடிவு செய்தபோது அரசு தலையிட்டு, 1882-இல் போண்டாய் கடற்கரையை பொது உடமையாகப் பிரகடனப்படுத்தியது. இங்கு வந்து செல்லும் பொருட்டு 1884-இல் ஒரு டிராம் சேவையும் துவங்கப்பட்டது. 1920-களுக்குள் கோடை கால வார இறுதியில் இந்தக் கடற்கரைக்கு ஒரு நாளைக்கு வரும் மக்களின் எண்ணிக்கை சுமார் 60,000 ஆக அதிகரித்தது.



இந்த அழகிய கடற்கரையின் நீளம் சுமார் 1 கிலோமீற்றர். ஆங்காங்கே நாங்கள் சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக் கொடிகளை கண்டோம். இந்தக் கொடிகள் நடப்பட்டுள்ள இடங்கள் நீந்துவதற்கு பாதுகாப்பானவை என்று நண்பர் ஒருவர் சொன்னார். சிறிது தொலைவு நடந்தவுடன் கடற்கரை பாறைகளுக்கு அருகே நீச்சல் குளங்கள் தென்பட்டன, இளம் பச்சை நிற நீரால் நிரப்பப்பட்ட இந்த நீச்சல் குளம் “போண்டாய் ஐஸ் பெர்க்ஸ் நீச்சல் சங்கத்துக்கு” சொந்தமானது. கடலுக்கு தெற்கு பகுதியில் அமைந்துள்ள இந்த குளத்தில் தான் வருடாந்த வாட்டர் போலோ என்று சொல்லக்கூடிய தண்ணீரில் விளையாடப்படும் பந்தாட்டம் நடைபெறுகிறது. இந்த நீச்சல் குளம் அமைக்கப்பட்டதன் காரணம் கடலுக்குள் செல்லமுடியாத குளிர்காலத்திலும் தங்கள் உடலை கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள நீர் உலவு (சுரப்பியின்) வீரர்கள் நீந்துவதற்காகத்தான்.

இந்தக் குளங்களை கடந்து ஒரு மேட்டுப்பகுதியில் ஏறி நடக்க , கடலின் அழகு இன்னும் அழகாகமிளிர்ந்தது. இந்தப் பகுதியை சுற்றிலுமுள்ள சுண்ணாம்புப் பாறைகள் கண்கொள்ளா காட்சியாகத் திகழ்ந்தன. பாறைமேல் நின்று கடலை பார்க்கையில் ஏதோ மொத்த உலகமும் நம் உள்ளங்கையில் இருப்பதாக ஒரு உணர்வு. கடலின் மேற்பரப்பில் சில இடங்களில் அடர் நீல நிறமும் சில இடங்களில் இளம் பச்சை நிறமும் தென்பட்டன. ஒரே கடலில் இத்தனை நிறங்களா என நினைக்கையில், ஆழம் அதிகம் இருக்கும் பகுதிகளில் கடலின் மேற்பரப்பு அடர்ந்த நிறத்திலும், சற்று ஆழம் குறைவான இடங்களில் இளம் பச்சை , நீல நிறத்திலும் இருக்கும் என்று அங்கிருந்த நபர் ஒருவர் சொன்னார்.

தன்னை மறந்த நிலையில் மக்கள் கரையில் இளைப்பாற “ஆயிரம் கரங்கள் நீட்டி அணைக்கின்ற தாயாய்” ஆதவன் அவர்களை ஆசுவாசப்படுத்தினான்.

எப்போதும் வெயில், வியர்வை என்று மட்டுமே பார்த்த என் போன்றவர்களுக்கு, இப்படி வெயிலில் காயும் வேலையை பார்த்தால் சற்று மிரட்சி தான். “வெயிலோடு விளையாடி வெயிலோடு உறவாடி “ பாட்டுக்கு இங்கு தான் அர்த்தத்தை கண்டேன்.

முன்கண்ட சிவப்பு மஞ்சள் நிறத்திலேயே ஆடைகளை போட்டுக்கொண்டு ஒருவர் மக்களைக் கண்காணித்தபடி நின்று கொண்டு இருந்தார், “லைப் சேவர்ஸ்” என அறியப்படும் இவர்கள் தான் கடல் அலைகளில் யாரேனும் மாட்டிக்கொண்டால் அவர்களை காப்பாற்றும் உன்னத சேவையைச் செய்பவர்கள். கேட்ட மாத்திரத்திலே இவர்கள் எங்கள் மரியாதைக்கு பாத்திரமானார்கள். இவர்களுக்கென்று ஒரு சங்கம் உண்டு, அதற்கு பெயர்தான் “போண்டாய் சர்ப் பாத்தேர்ஸ் லைப் சேவிங் கிளப்”. “சர்ப் ரீல்” (Surf Reel) என கூறப்படும் கடலில் சிக்கியவர்களை காப்பாற்றும் கருவியை கண்டுபிடித்தது இந்தச் சங்கத்தினர் தான்.


கோடைகாலத்தில் இப்படி கடற்கரைக்கு சென்று “காற்றுவாங்க போனேன் ஒரு கட்டுரை வாங்கிவந்தேன்” என உங்களிடம் என் அனுபவங்களை பகிர்வதில் மட்டற்ற மகிழ்ச்சி.

கடந்த ஒரு வருட காலமாக உங்களிடம் பகிர்ந்துகொண்டு இருக்கும் இந்த சுற்றுலா தல நினைவுகளை வாசிக்கும் உங்களுக்கு என் மனமார்ந்த நன்றி

இன்னும் இணைந்து பயணிக்க பல இடங்கள் இருப்பதால், வாருங்கள் தொடர்ந்து பயணிப்போம் வரும் காலங்களில்...

**(பயணங்கள் முடிவதில்லை)**


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்போர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
LuckyJewelleryMelborne
luckysankaran@gmail.com
0387121974, 0415233284



# இலங்கை: போதைகளின் சொர்க்கம்

**ஆர்.சனத்**

ஆசியாவின் சொர்க்க பூமி, இந்து சமுத்திரத்தின் முத்து என்றெல்லாம் போற்றிப் புகழப்பட்ட இலங்கையானது, தற்போது போதைப்பொருள் கடத்தல்காரர்களின் கூடாரமாக - மத்திய நிலையமாக மாறியுள்ளது என பரவலாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறு முன்வைக்கப்படும் விமர்சனங்களை அவ்வளவு எளிதில் நிராகரித்துவிட முடியாத வகையிலேயே அண்மைக்காலச் சம்பவங்களும் அரங்கேறிவருகின்றன.

இலங்கைக் கடற்பரப்பில் அண்மைக்காலமாக கடற்படையினரால் கொத்து, கொத்தாக போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுவருகின்றன. மறுபுறத்தில் படையினரிடம் சிக்காமல் ஏதோவொரு வழியில் நாட்டுக்குள் வரும் போதைப்பொருட்களின் அளவும் ஏராளம் என்பது கசப்பான உண்மையாகும். தபாலில்கூட போதைப்பொருட்கள் அனுப்படும் நிலையும் நீடிக்கின்றது.

இது விடயத்தில் அரசாங்கம் மீது மட்டும் பழிபோட்டுவிடமுடியாது. விமான நிலையம், துறைமுகம், சுங்கம் உட்பட சில இடங்களில் பணியாற்றும் அதிகாரிகளும் பணத்துக்காக எதையும் செய்யும் இழிநிலைக்கு இறங்கிவிட்டனர். பாதாளக்குழுக்களுக்கு தகவல் வழங்கும் சில அதிகாரிகளும், கைப்பற்றப்படும் போதைப்பொருட்களை மீள விற்பனை செய்யும் சில அதிகாரிகளும் இருக்கும் கட்டமைப்புக்குள்தான், அரச நிர்வாகப் பொறிமுறையும் சுழன்றுக்கொண்டிருக்கின்றது என்பதையும் ஏற்றாக வேண்டும்.

அதன் ஒரு பாதக விளைவாகவே இன்று இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்புக்குள்ளும் உயிர்க்கொல்லிப் போதைப்பொருட்கள் ஊடுருவியுள்ளன. இதனால் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. சமூகத்தில் உள்ள இளைஞர்களும் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி வருகின்றனர். இலங்கையில் சுமார் 5 லட்சம் இளைஞர், யுவதிகள்வரை போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன. மதத்தலைவர்கள் உட்பட முன்மாதிரியாக செயற்பட வேண்டியவர்கள்கூட இந்த வலைக்குள் சிக்கிவிடுகின்றனர் என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

குறிப்பாக ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களை ஒரு நாளைக்கு பயன்படுத்தினால் அதற்கு ஆயுள் முழுதும் அடிமையாக நேரிடும் எனவும், ஐஸ் உள்ளிட்ட உயிர்கொல்லி போதைப்பொருட்களை பயன்படுத்துவோர் ஈராண்டுகள் வரைதான் வாழ்கின்றனர் என மருத்துவத் தரப்பு தகவல்கள் குறிப்பிடுகின்றன. சமூகத்தில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் இடம்பெறுவதற்கு இந்த போதைப்பொருளும் பிரதான காரணமாகும். சினிமாப் படங்களில் வருவதைப் போன்று பயங்கரமான பல சம்பவங்கள் இலங்கையில் இடம்பெறுகின்றன. எனவே, போதைப்பொருள் மாபியாக்களுக்கு, விற்பனையாளர்களுக்கு, தரகர்களுக்கு சமாதி கட்டாவிட்டால், சீர்கேடான சமூகம் உருவாகி, இலங்கை நாசமாகிவிடும்.

இந்த பாரதூரத்தன்மையை உணர்ந்துள்ள அரசாங்கம், அவசர நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொண்டுள்ளது காலம் கடந்த ஞானமாக இருந்தாலும், அதனை வரவேற்றாக வேண்டும். இதன்படி நச்சுப் போதைப்பொருட்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் பாவனையைத் தடுப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளை அடையாளங்காணல், திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக ஜனாதிபதி செயலணியொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்தால் மரண தண்டனை விதிக்கும் கடுமையான சட்டமும் அமுலுக்கு வரவுள்ளது. பாடசாலைகளிலும் விசேட சோதனைகள் இடம்பெற்றுவருகின்றன.

அதேவேளை, பாதாள குழுக்களின் செயற்பாடுகளும் சமூகத்துக்கும், சட்டம், ஒழுங்குக்கும் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. போதைப்பொருளுக்கு அடிமையாகும் பலர் பாதாளக் குழுக்களுடன் இணைந்துவிடுகின்றனர். போதைப்பொருட்களை கடத்துதல், விற்றல் போன்ற செயற்பாடுகளில் பாதாளக் குழுவினரே ஈடுபட்டுவருகின்றனர். நாட்டின் பல இடங்களில் பட்ட பகலில் படுகொலைகள் இடம்பெறுகின்றன. துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களும் இடம்பெறுகின்றன. போதைப்பொருளும், பாதாளக் குழுக்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டவை. அவற்றை ஒடுக்க - கட்டுப்படுத்த போர்க்காலத்துக்கு ஒத்த செயற்பாடுகள் அவசியம் என்ற கருத்தை நீதி அமைச்சர்கூட ஏற்றுக்கொண்டிருந்தார்.

அந்தவகையில் இவ்விரு விடயங்களையும் கையாளும் பொறுப்பு விசேட அதிரடிப்படையினரிடம் முழுமையாக கையளிக்கப்படவுள்ளது. இதற்கான திட்டம் பற்றி விளக்கமளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி,

“போதைப்பொருளுக்கு அடிமையானவர்களால் சிறைச்சாலை நிரம்பியுள்ளது. அத்துடன், ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தால் மரண தண்டனை விதிக்கும் வகையில் தற்போது சட்டத்திருத்தமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, புனர்வாழ்வளிக்கும் வேலைத்திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியுள்ளது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்கு கொண்டுவராமல், அவர்களுக்கு புனர்வாழ்வளித்து சமூகமயப்படுத்தல் பற்றி கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

போதைப்பொருள் என்பது சர்வதேச வலைப்பின்னலுடனும், பாதாளக்குழுக்களுடனும் தொடர்புபட்டுள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்துவதென்பது இலகுவான விடயமல்ல. போதைப்பொருள் விவகாரம் தொடர்பில் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர். எதிர்காலத்தில் பாதாளக் குழுக்களை கட்டுப்படுத்தல் மற்றும் போதைப்பொருளை தடுத்தல் போன்ற பணிக்காக மட்டும் விசேட அதிரடிப்படை முழுமையாக ஈடுபடுத்தப்படும். இதன் முதற்கட்டமாக ஏனைய பணிகளில் இருந்து விசேட அதிரடிப்படையினர் விடுவிக்கப்படவுள்ளனர். எதிர்காலத்தில் 600 பேரை விசேட அதிரடிப்படைக்கு இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.” - என்று விவரித்தார்.

என்ன நடவடிக்கை எடுத்தாவது போதை எனும் கொடிய ஆபத்திலிருந்து இலங்கையை மீட்டால் போதும்.



# தாயின் வலி

## சிறுகதை

சியாமளா யோகேஸ்வரன்

சில்வண்டுகளின் ஓசையும் மாரித்தவக்கையின் ஓசையும் மாறி மாறி லயத்துடன் கேட்டுக் கொண்டிருந்ததைத் தவிர, அந்த நள்ளிரவில் வேறு அரவங்கள் எதுவுமிருக்கவில்லை. தூணோடு சாய்ந்து அமர்ந்திருந்த சத்யா, மெல்ல எழுந்து மதுவின் தலைமாட்டில் எரிந்து கொண்டிருந்த விளக்குக்கு எண்ணெய் விட்டாள். அப்படியே மகளின் தலையை வருடி விட்டவள், குலுங்கிக் குலுங்கி சத்தமே இல்லாமல் அழ ஆரம்பித்து விட்டாள்.

இரவுத்துணைக்கு என்று வந்து படுத்திருந்த பக்கத்து வீட்டுப் பாட்டி தலையைக் கையால் இறுக்கி வாரி முடிந்தபடியே எழும்பி அமர்ந்த படியே சொன்னதைக் கேட்கையில் பகீரென்றது.

“அவளுக்குக் காலம் வந்துட்டுது. போயிட்டாள், அவளை நினைச்சு அழுதழுது நீ வருத்தக்காரியா மாறப் போறியே? ஐந்து மணியாகுது. இனி நடக்க வேண்டியதைப் பாருங்கோ.”

விடிந்து விட்டது. இனிப் பரபரவென காரியங்கள் முடிந்து மதுவைக் கொண்டு போய் தீயில் போட்டு விடுவார்கள். அவ்வளவுதான், இன்னும் ஒரு ஆறு மணி நேரத்தில் என் கண்மணி காற்றுடன் கலந்து விடுவாள். தங்கை ரீ குடிக்கக் கேட்டபோது மதுவின் ஞாபகம் பொத்துக் கொண்டு வந்தது.

தாய் ரீ குடிப்பதைக் கண்டு விட்டால் போதும். பாய்ந்து வந்து பறித்துக் குடிப்பாள். சத்யாவும் புன்னகையுடன் கொடுத்து விடுவாள். வீட்டுக்குப் பிடிக்காமல், பிடித்தவனுடன் ஓடிச்சென்று மணம் முடித்த மூன்றாம் மாதம் மது கருவில் உருவாகி விட்டிருந்தாள். பெற்றோரின் பிரிவு தந்த வருத்தம், அவர்களின் நியாயமான கோபத்தின் பின்னாலிருந்த வலி, கட்டிய மூன்றாம் மாதமே சுயகுணத்தைக் காட்டி விட்ட கணவனால் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் என்ற எல்லாம் சேர்ந்து கர்ப்பகாலம் கலங்கும் காலமாகத் தான் அவளுக்கு கழிந்திருந்தது. கருவைக் கலைக்க என்று எடுத்த முயற்சியும் கை கூட மறுக்க, மது பிறக்கும் போதே கண் பார்வை இல்லாதவளாக, அறிவில் குறைந்தவளாய் தான் பிறந்திருந்தாள்.

சத்யாவுக்கும் பெற்ற பெண்குழந்தை இப்படிக் குறைபாட்டுடன் பிறந்ததை எண்ணி யாரை நொந்து கொள்வதென்று தெரியாத பக்குவமற்ற வயது தான். எல்லாவற்றுக்கும் தாயை எதிர்பார்த்திருக்கும் குழந்தை உண்மையில் சுமைதான் என்றாலும், அதைக் கூடச் சினக்காமல் செய்யவும், தனது தலைவிதியை அப்படியே ஏற்கவும் பழக்கப்பட்டு விட்டிருந்தாள்.

இரண்டாவது குழந்தை மிருணா பிறந்த பின்னர், கணவன் வெளிநாட்டுக்கு உழைக்கவெனச் சென்று விட, சத்யாவின் பொறுப்புகள் இரட்டிப்பாகி விட்டிருந்தன.

இயலாதவள் என்பதால் இயற்கை மதுவை சும்மா விட்டு விடவில்லை. மது பெரியவளான-தும் தான் சத்யாவின் பொறுப்புக்கள் அதிகமாகி விட்டிருந்தன. உலகம் புரியாத மதுவைத் தனியே விட்டு விட்டுச் செல்லவே அச்சமாய் இருந்ததில், எங்கு செல்வதானாலும் கூட்டிச் சென்றாள். அல்லது வெளியில் செல்வதை சத்யா தவிர்த்துக் கொண்டாள்.

ஒரு நாள் வைத்தியசாலைக்குப் போய் விட்டு பஸ்சில் வரும் போது, களைப்பில் ஒரு இரண்டு நிமிடம் அசந்திருக்க மாட்டாள். மதுவின் முனகல் குரலில் கண் விழித்தாள். மதுவுக்குப் பக்கத்தில் நின்றவனின் காமப்பார்வையில் நடந்ததைப்புரிந்து கொள்ள அதிக நேரம் எடுக்கவில்லை. அன்றுடன் பஸ்சில் பிரயாணம் செய்வதை விட்டு விட்டாள். தங்கைகளின் ,தம்பியின் வீட்டு விசேடம் என்றால் மட்டும் ஓட்டோவில் போய் வந்தாள்.

மதுவுக்கு சிந்திக்கும் ஆற்றலும், பார்வையும் இல்லாவிடினும் கூட, பெண்களுக்கான அத்தனை குணங்களும் சொல்லிக் கொடுத்துப் புரிய வைக்க வேண்டிய தேவையின்றித் தானாகவே அமைந் திருந்தன. உடை மாற்றுவதாயின் கூட தாயைத் தவிர தன்னை யாரும் தொடுவதை அனுமதிப்ப தில்லை. அந்நிய ஆண்கள் யாரும் வீட்டுக்கு வந்தால், தன் அறையை விட்டே வெளியில் வர மாட்டாள்.

எதிர்பாராத விதமாய் கணவனும் வெளிநாட்டில் அகால மரணமடைந்து விட, பொருளாதார நிலை கருதி மதுவை விட்டு விட்டு, சத்யாவால் வேலைக் குக் கூடச் செல்ல முடியவில்லை. நிர்க்கதியான நிலையில் மனம் நொந்து இறைவனை வேண்டியதும் அன்று தான்.

“ஏன் இறைவா எனக்கு இத்தனை தொடர் சோதனைகளைத் தருகிறாய்? இருபந்தைந்து வருட கால மணவாழ்வில் வேதனையைத் தவிர நான் வேறு எதையும் அறிந்ததில்லை. இனி என்ன செய்யப் போகிறேன்? இந்தப்பிள்ளையுடன் நான் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லையா?” மனம் நொந்து அழுதது அந்த இறைவனுக்குக் கேட்டிருக்க வேண்டும். அவளது தாய்மாமன் பொறுப்பைச் சுமக்க முன் வந்தார்.

“நான் இருக்கும் வரை உங்களைப் பார்த்துக் கொள்வேன். அதற்குப் பிறகு என்ன செய்யப் போகிறாய் சத்யா?”

அன்று வரை அதைப் பற்றி அதிகம் யோசிக்கவே யில்லை. தானில்லாத நிலையில் மதுவை யார் பார்த்துக் கொள்ளப் போகிறார்கள்? வேதனை மனதைத் தின்று தீர்க்க,

“இறைவா, எனக்கு முன்னம் இந்தக் குழந்தையை எடுத்துக் கொண்டு விடு.” வேண்டி முடித்தவள் கதறி அழத் தொடங்கி விட்டாள்.

நானும் ஒரு தாயா? பெற்ற குழந்தை நன்றாக இருக்க வேண்டும் என்று வேண்டாமல், இறக்க வேண்டும் என்று வேண்டுகின்றேனே?

சத்யா கேட்பதை எல்லாம் தருவதாக இறைவன் அப்போது கங்கணம் கட்டிக்கொண்டிருந்திருக் கின்றான் என்பது இப்போது புரிந்தது.

மூன்று நாட்களுக்கு முன்னர் இருந்தே ஏதோ வொரு வலியில் முனங்கத் தொடங்கியவளை வைத்தியசாலையில் காட்டினார்கள். வைத்தியர்களால் எதையுமே கண்டு பிடிக்கமுடியவில்லை. வீட்டுக்கு வந்த பின்னரும் எதையும் உண்ண மறுத்து விட்டாள். பச்சைத் தண்ணீர் கூடப் பருக மறுத்தது தான் சத்யாவை யோசிக்க வைத்தது.

சாப்பாடும் இல்லாமல் தண்ணீரும் குடிக்காமல் ஓடித்திரிந்தவளை கூட்டி வந்து தன்னுடன் அமர்த்திக்கொண்டாள். உடலில் எங்கோ வலிக்கின்றது என்பதற்கு அறிகுறியாக வலியால் முனகினாள். அதை விட மூச்சும் அதிவேகமாக இரைக்கவே, களைத்துப் போனவளாய் தாயின் மடியில் சரிந்து கொண்டாள். முப்பது வயதிலும் மூன்று வயதுக் குழந்தையைப் போல் உறங்குபவளின் தலையை வருடிக் கொடுக்கையில் சத்யாவின் நெஞ்சமும் உருகியது. என்ன செய்கின்றது என்பதை வாயைத் திறந்து சொல்ல முடியாதவள். பாவம் குழந்தை. தூங்கி எழுந்ததும் வைத்தியரிடம் சென்று காட்ட வேண்டும் என்று உறுதி செய்து கொண்டாள்.

மடியில் மகள் உறங்கிக் கிடக்க, பக்கத்து மேசை யில் கிடந்த கதைப்புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினாள். கதையின் சுவாரசியத்தில் நேரம் போவதே தெரியவில்லை. கால் மரத்துப் போனதை உணர்ந்தவள், மதுவை மெல்ல நகர்த்த முனைந்தாள். வழமையாக எவ்வளவு மென்மையாகத் தொட் டாலும், அசைந்து கொடுப்பவள் எந்த அசைவு மின்றி இருக்கவே நெஞ்சை ஏதோ அடைப்பது போல உணர்ந்தாள். மூக்கில் கையை வைத்துப்



பார்க்க வேண்டும் போலிருந்தாலும் ஏனோ கையும் காலும் ஏவ மறுத்தன. பதற்றத்துடன் போனை எடுத்து தங்கையை அழைத்து விடயத்தைச் சொன்னாள்.

அதற்குப் பின்னர் அம்புலன்சில் கொண்டு மது செல்லப்பட்டு, உயிர் பிரிந்து விட்டமையும் உறுதிப் படுத்தப்பட்டது. இத்தனை நாள் பட்ட கஷ்டத்துக்கு விடிவு என்று எல்லோரும் காதுபடப் பேசினார்கள். எல்லோரும் மதுவால் சத்யாவுக்குக் கஷ்டம் என்று யோசிக்கிறார்களே தவிர, முப்பத்தொரு வருடமாக ஒரு நொடி கூடத் தாயைப் பிரியாமல் துணையாய் இருந்திருக்கிறாள் என்பது புரியவில்லையே?

ஐயரும் வந்தாயிற்று. கடைசித்தடவையாய் மகளைத் தொட்டுக் குளிப்பாட்டுகையில் பொங்கிப் பொங்கி அழுதாள். இறுதிப் பயணத்துக்கெனப் பச்சைக் கலர் சேலையில், பாங்காய் பயணம் போகக் காத்திருந்தவளைப் பார்க்கையில் உயிரின் நுனி வரைக்கும் சென்று வலித்தது. எத்துணை பால் முகம் மாறாத குழந்தை முகம் என் பெண்ணுக்கு?

அம்மா இல்லாமல் வாழ முடியாது என்று புரிந்து கொண்டாளோ, அல்லது அம்மா இப்படி வேண்டிக் கொண்டு விட்டாளே என்று பிரிந்து சென்றாளோ தெரியவில்லை.

‘பதிலைச் சொல்லி அம்மாவின் குற்ற உணர்வைப் போக்கி விட்டுப் போ’ என்று சொல்ல வரம் கொடுத்த இறைவன் கூட அங்கில்லையே.

**(போன வாரம் இறந்து போன மகளுக்காக உருகும் என் ஒன்று விட்ட சகோதரியின் உணர்வுகளில் இருந்து...)**

# மாதராசிபலன்



## மேடம்

தீவிர உழைப்பும், அதிக முயற்சிகளுடனும் காரியங்களில் ஈடுபடும் மேஷ ராசியினரே, இந்த மாதம் நல்ல பலன்களை பெறப் போகிறீர்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடக்கும். எல்லாவகையிலும் சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். சற்றுக் கூடுதலாக எதிலும் கவனம் செலுத்துவது நல்லது. திடீர்ச் செலவு உண்டாகலாம். திட்டமிட்டபடி செல்ல முடியாமல் பயணத்தில் தடங்கல் ஏற்படலாம். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசுவதன் மூலம் இடைவெளி குறையும். கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். அரசியல் துறையினர் தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது.

## கடகம்

எதையும் அலசி ஆராய்ந்து காரிய மாற்றும் கடக ராசியினரே, இந்த மாதம் எந்த ஒரு காரியத்தையும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணவரத்து அதிகரிக்கும். அடுத்தவர்களிடம் பொறுப்புக்களை ஒப்படைக்காமல் நேரடியாக செய்வது நன்மை தரும். தொழில் வியாபாரம் தொடர்பாக அதிகம் உழைக்க வேண்டி இருக்கும். கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கலைத்துறையினருக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். அரசியல் துறையினருக்கு எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது.

## துலாம்

துணிச்சலாகக் காரியங்களில் ஈடுபடும் அதே நேரத்தில் நியாயமாகவும், நேர்மையாகவும் அதனைச் செய்து முடிக்கும் குணமுடைய துலா ராசியினரே, இந்த மாதம் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் கட்சிப் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது.

## மகரம்

எத்தனை தடைவந்தாலும் எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் பின்வாங்காத மகர ராசியினரே, இந்த மாதம் நன்மை வரும். எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். அனுகூலமான பலன் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர். கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும். பொது நிகழ்ச்சிக்கு தலைமை தாங்குமளவுக்குப் பிரபலமாவீர்கள். நல்ல வாய்ப்புகள் வரும்.

## இடபம்

பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளை செய்து பக்குவமான அணுகுமுறையால் வெற்றி காணும் ரிஷப ராசியினரே, இந்த மாதம் நல்ல யோகமான பலன்களைப் பெற போகிறீர்கள். பணவரத்து அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். சொத்துக்கள் சம்பந்தமான காரிய அனுகூலம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக நடக்கும். கணவன், மனைவிக்கிடையே உறவு பலப்படும். கலைத்துறையினருக்கு தொழில் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். அரசியல் துறையினருக்கு தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது.

## சிம்மம்

உங்களது பணிகளை அடுத்தவரிடம் ஒப்படைக்காமல் நேரிடையாக செய்யும் குணமுடைய சிம்ம ராசியினரே, இந்த மாதம் எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். அரசியல்வாதிகள் சகாக்களை பகைத்துக் கொள்ள வேண்டாம். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும்.

## விருச்சிகம்

பொறுமையோடு எந்த விடயத்தையும் அணுகும் குணமுடைய விருச்சிக ராசியினரே, இந்த மாதம் அனுகூலமான பலன்களைத் தரும் வகையில் இருக்கிறது. ஏற்பட்ட தடை, தாமதம் நீங்கும். எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தில் இருந்த சண்டை சச்சரவுகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த மனக்கசப்பு மாறும். கலைத்துறையினருக்கு பணிகளில் கவலைகள் இருந்தாலும் நிறைவாக முடியும். எந்த ஒரு செயலையும் யோசித்து செய்வது நல்லது. அரசியல் துறையினருக்கு தேவையற்ற பிரச்சனைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது. மனோதிடம் உண்டாகும்.

## கும்பம்

எந்தக் காரியம் செய்தாலும் அதில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உடைய கும்பராசியினரே, நீங்கள் உழைப்பதற்கு அஞ்சாதவர். இந்த மாதம் நல்ல பலன்களைப் பெறுவதில் சிரமம் இருக்காது. வீணாக மனதை உறுத்திக் கொண்டிருந்த கவலை நீங்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மன வருத்தம் நீங்கும். அரசியல்வாதிகளுக்கு தொண்டர்களால் ஆதாயம் ஏற்படும். மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

## மிதுனம்

கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை உடைய மிதுன ராசியினரே, இந்த மாதம் வழக்கு சம்பந்தமான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பயணங்கள் செல்ல நேரிடலாம். மனத்திருப்தியுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றம் காண புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

## கன்னி

எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிக்கும் கன்னி ராசியினரே, இந்த மாதம் எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். விருப்பங்கள் கைகூடும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சி கூடும். அரசியல்வாதிகள் கோஷ்டிச் சண்டையிலிருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. சகாக்களுடன் உரிமையாகப் பேசி பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். கலைத்துறையினர் மூத்த கலைஞர்களால் ஆதாயமடைவர்.

## தனுசு

எந்த நேரத்திலும் தகுதி குறையாமல் செயற்படும் தனுசு ராசியினரே, நீங்கள் உயர்ந்த எண்ணங்களை உடையவர்கள். இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். சுப பலன்கள் ஏற்படும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆனாலும் எதிலும் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. கணவன் – மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் ஆணையை மீறி தனி ஆவர்த்தனம் காட்ட வேண்டாம். தொகுதி மக்களிடம் நெருங்கிப் பழகுவது அவசியம். கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் வாய்ப்பளிக்கும்.

## மீனம்

சாதூரியமான பேச்சின் மூலம் காரிய வெற்றியை ஈட்டும் மீன ராசியினரே, உங்கள் பணவரத்து அதிகரிக்கும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. வீண் ஆசைகள் தோன்றலாம். மனதைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை ஏற்படும். கலைத்துறையினருக்கு நீண்ட நாட்களாக இருந்த பழைய பகைகள் மாறும். எந்த ஒரு காரியத்தைச் செய்யும் முன்பும் அதை எப்படி செய்வது என்ற மனத் தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். அரசியல்துறையினர் எதிர்காலம் பற்றி முக்கியமான முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள்.

ஊழிக்காலம்-2

39



# புயலுக்குப்பின்...

அதிகாலையிலேயே விழிக்க வைத்த அந்தச் சலனம் அவளை வெளியே கொண்டு வந்தது. இன்று விடுதலையாகிப் போவோர் அங்கே குழுமிக்கொண்டிருந்தனர். அவர்களைப் பொறுப்பெடுக்கவேண்டிய பெற்றோர் பம்பமடு முகாமுக்கு அழைக்கப் பட்டிருந்தனர். இவர்களை இங்கிருந்து பம்பமடுவுக்கு கொண்டு செல்லப் போகிறார்கள்.

"எல்லாம் ஆறுமணிக்கு லைன் பண்ணுங்க" என்று சார்ஜன்ட் நேற்றிரவே கூறியிருந்தார். பார்வதி வெளியே வந்தாள். பிள்ளைகளுடன் உரையாடினாள். சிலரை வாழ்த்தினாள்.

" பிள்ளையள் ஆரும் சோப் வச்சிருந்தா தந்திட்டுப் போங்க ,காசு தாறன்" என்று கேட்டாள். நிரோஜனி, இரண்டு சோப்புகளைத் தூக்கி கொடுத்தாள். எனினும் பணம் வாங்க மறுத்துவிட்டாள். இவள் பம்பமடுவிலும் பார்வதிக்கு தன் பாயில் இடங்கொடுத்து உதவியவள். கடுமையான விரதங்கள் இருந்து வென்றவள். ஒரு காலை இழந்தவள்.

இன்னுமொரு பெண் இரண்டு சோப்புகளை கொடுத்தாள். அவளும் பணம் வாங்க மறுத்து விட்டாள். பார்வதிக்கு ஒரு மாதிரியாக வெட்க உணர்வு ஏற்பட்டது.

"சரி நான் கோயில் உண்டியலில் போடுகிறேன்" என்றாள். "கூடாது இது உங்களுக்குத்தான்" என்ற நிரோஜனி ஐம்பது ரூபாவை மேலும் கொடுத்து" இதை உண்டியல்ல போடுங்க" என்றாள். இதை பார்த்துக் கொண்டிருந்த லதா "இந்தாங்க இதையும் " என்று தானும் ஐம்பது ரூபா கொடுத்தாள். இன்னொருத்தி நூறு ரூபா, வேறொருத்தி நூறு, இவ்வண்ணமே உடனடியாகவே ஆயிரத்து முந்நூறு ரூபா சேர்ந்து விட்டது. அதை வாங்கிய பார்வதி,

"இன்னும் தேத்தண்ணி போடயில்லயா..? என்று சத்தமிட்டாள்.

"அ... ஆ... கொஞ்சம் பிந்திப்போச்சு, இந்தா கொண்டுவாறோம்" என அடுக்களையிலிருந்து சத்தம் வந்தது. அதற்குள் இங்கு வந்த ஆமிப்பெண் "எல்லாம் அந்தக் காணி திடலுக்குள்ள போங்க! குவிக்.." என்று அவர்களைச் சாய்த்துக் கொண்டு திடலுக்குப் போனாள்.

அங்கே மேலும் பல இராணுவப் பெண்கள் இருந்தனர். விடுதலையாகிப் போவோரின் பொதிகள் சோதனையிடப்பட்டன.

இங்கு வந்த பொறுப்பதிகாரி அவர்களிடம் பேச ஆரம்பித்தான்.

"ஆயுபோவன் வணக்கம்"

" ஆய்போவன்" பிள்ளைகள் எதிரொலித்தனர்.

" எல்லோரும் சாப்பிட்டாச்சா..?"

" இல்லை.. ஆம்.."

யார் சாப்பிடவில்லை"

சிலர் கையை உயர்தினர்.

"ஏன் சாப்பிடேல்ல.. தேத்தண்ணி குடிச்சதா?"

"இல்லை, தேத்தண்ணி ஊத்தேக்க தான் இஞ்சால வரச்சொல்லி கூட்டி வந்திட்டினம்"

அந்தாள் கோபத்தின் உச்சிக்கே போய் விட்டான். ஏதோ பேருக்கு அவனுக்குப் பக்கத்தில் நின்ற இராணுவத்தினரை பேசிக் கலைத்தான். அவர்கள் நேராக பார்வதியிடம் வந்தனர்.

"காலைச் சாப்பாடு தயார்.. அவையள்தான் கடலை விருப்பமில்லை எண்டு விட்டுவிட்டு போகினம்" என்றாள் பார்வதி.

"மத்தியான சாப்பாடு பார்சல் குடுத்ததா..?"

"இல்லை" என்றாள் பார்வதி.

அதற்குள் முகாம் லீடர் வந்து விட்டாள்.

"ஏதோ சாப்பாடு குடுக்கேல்லயாம் பிள்ளையளுக்கு எண்டு சொல்லுறாங்க" என்றாள் பார்வதி.

"அரிசியில்லையே.. அப்பப்ப தேவையான அரிசிதானே தருகினம். கொஞ்சமும் கூடத் தாறதில்லை. இப்ப இவ்வளவு நேரத்தைக்கு இன்னம் ஸ்ரோர் திறக்கேல்ல. நான் என்ன செய்யிறது?"

"என்ன செய்யிறதா..? அந்த புளொக்கில சமைச்சது தானே" என்று அவன் ஏச, பார்வதி விலகினாள். லீடர் ரஞ்சினி முணுமுணுத்துக் கொண்டு நின்றாள். இவள் இயக்கத்திலும் ஒரு படையணிப் பொறுப்பாளர் தான்.

பொறுப்பதிகாரி தன் இடிபோன்ற குரலில், "எங்க,எங்க லீடர்? வரச்சொல்லுங்க" என்றவாறே பார்வதியையும் வரும்படி அழைத்தான்.

இந்த மொழிபெயர்ப்பாளர் வேலையால் ஆருக்கு பேசினாலும் பார்வதியைப் பார்த்து 'சொல்லுங்க' என்று தட்டுவான். அவனால் தமிழை நன்கு புரிந்து கொள்ள முடியும். ஆனால் பேசவராது. அவர்கள் அலுவலகத்துக்கு போனதும்,

"உங்களுக்கு காலை, மத்தியானம் சாப்பாடு ரெண்டும் குடுத்துவிட வேணும் எண்டு சொன்னது தெரியுமா, தெரியாதா..?" ரஞ்சினி ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால் சொல்லவில்லை. இப்போது ரதி சொன்னாள்.

"சொன்னதுதான் தெரியும்"

"அப்ப ஏன் செய்யேல்ல? இஞ்சயிருந்து பம்பமடு போக எத்தின மணி செல்லும்? . சாப்பிடாம போகுதெண்டு உங்கட மனம் இரங்கவில்லையா..? நான் சிங்களவன் எனக்கே பதைக்குது. நீங்க என்ன பிறவியள் உப்பிடித்தான் எல்ரீரீயில இருந்தியா? சும்மா கை காட்டுறது டாடா சொல்லுறது பாசமில்ல. யாரும் அந்த புள்ளயளோட கதைச்சதா.?" என்றவன் திரும்பி பார்வதியை பார்த்து.

"அம்மாவச் சொல்லல்ல.. அம்மா பிள்ளையளோட பேசிக்கொண்டதை கண்டனான்" என்றவன் மீண்டும் ரஞ்சினியிடம் திரும்பி

"போங்க, இப்ப உடன சாப்பாடு செய்யுங்க .போற பஸ்ஸில அனுப்புங்க. போங்க உங்கட சகோதரங்தானே! உங்கட மனம் சரியில்லை. போங்க"என விரட்டினான்.

பார்வதி எல்லாவற்றையும் மொழி பெயர்த்தபின் புறப்பட்டாள். அப்போது கப்டன் கருணாரட்ண வெளியே வந்து. "அரிசி இல்லாட்டி, நான் இதில தான் இருக்கிறன் என்னை வந்து கேட்டிருந்தா.. என்ன ? சாமான் எதுகும் தருவன் .அம்மாவுக்கு தெரியும்.."என்றான்.

பார்வதி ஆமெனத் தலையசைத்தாள்.

" ஓ! அரிசி காணாதபோது நான் தரவில்லையா.?" என்றார்.

"நல்லது," என்ற பார்வதி வெளியேறினாள்.

ரஞ்சினிக்கும் ரதிக்கும் முகம் இருண்டு போனது.



"உணவுப் பார்சலை இரண்டாம் புளொக்கிலிருந்து பெற்றுக் கொடுத்தா என்ன..?" என்றாள் ரதி.

"அப்பிடியா! போய் நீங்க சமைங்க. என்ன சோம்பல்.." என்றான் அதிகாரி.

பிள்ளைகளை ஏற்ற ஒரு பேருந்து வந்தது. அதில் உடைமைகளுடன் அரைவாசிப் பேரை ஏற்ற முடிந்தது. பொறுப்பதிகாரி பின்னால் ஒரு தட்டிவானில் ஏறி அந்தப் பேருந்தை தொடர்ந்து சென்றான்.

மீதிப்பிள்ளைகள் நடுக்காணியுள் தனித்து விடப்பட்டனர். அந்தப் பேருந்து பம்பமடு சென்ற பிள்ளைகளை இறக்கிவிட்டு திரும்பி வரும் வரை இவர்கள் காத்திருந்தனர்.

மீண்டும் வந்த வாகனத்தில் உணவை ஏற்றி அனுப்பினார்கள். ஒரு 'ரீ.ஐ.டீ' அதிகாரி நிரம்ப பத்திரிகைகள் கொண்டு வந்தான். அதை எல்லாருக்கும் கொடுக்கச் சொன்னான். அந்த வாரம் முழுவதும் வந்த 'தினகரன்' நாளிதழ்கள் அவை. பார்வதி அவற்றை வாங்கி அனைவருக்கும் விநியோகித்தாள்.

"இந்தாங்கடி இராணுவத்தினர் புனர்வாழ்வு முகாமுக்கும் தினமும் பத்திரிகைகளையும் வழங்குகிறார்கள்." என்ற பார்வதி,

"அறிக்கை எழுதேக்க நீங்க சாட்சி சொல்லவேணும். பேப்பர் தாறவங்களா..?"

"ஓ! பழையபேப்பர் தாறவை.."

"ஏன் இதை நீ முதல் பாத்தநீயா..?"

"இல்லை.."

"அப்ப இது உனக்கு புதுப்பேப்பர்தானே.. கேட்டா என்ன சொல்லுவாய்..?"

"முகாமில பேப்பர் தாறவை படிக்க.."

"படிக்கவோ, படம்பாக்க,பார்சல் கட்ட.."

"ஊகும். நீங்கள் தினசரி படிக்கறீங்களோ!"

"ஓ.."

"அதுதான் அதேதான்! சரி கூட்டம் கூடாம போங்கோ!"

மறுநாள் முகாமில் தண்ணீர் பஞ்சம் வந்து விட்டது. தனிச் சமையல் செய்பவர்கள், குளிப்பவர்கள் எல்லோரும் கஸ்ரப்பட்டனர். இருந்த தண்ணீர் பொதுச் சமையலுக்கே போதுமானதாக இருந்தது.

பார்வதியின் தனிச்சமையல் குழுவிலிருந்த சிறீ வந்தாள். "இண்டைக்கு சமைக்க வேணுமா..?" என்று கேட்டாள்.

"வேண்டாம். ஏன் கேட்டீங்க?"என்றாள் பார்வதி.

"இல்ல தண்ணீ எடுக்கவில்லை அதுதான்"

"வேண்டாம். நான் கிச்சனில காலைக் சாப்பாடு எடுத்து சாப்பிட்டிட்டன். மத்தியானமும் இங்க எடுப்பம்."

"என்ன கிச்சன் சாப்பாடா?" அவள் ஆச்சரியமாக கேட்டாள்.

"ஓ.. சோறும் கறியும்"

பார்வதி காலையில் சாப்பிடுவது எப்போதாவது சில நாட்கள் தான். அதுவும் ஒதுக்கரிசி,அரைஅவியல் என்ற பிரச்சினை என்றால் அதுவும் இல்லை. ஒரு தேநீரோடு பொழுது முடியும்.

"மம்மீ.. மம்மீ.. இங்கனக்க வாங்களன்."

அழைப்பை கேட்டு திரும்பினால், வேலிக்குள் சார்ஜன்ட் நளின் நின்றான்.

"என்ன பிரச்சினை..?"

"லவ்வர்ஸ் மீட்டிங். ஓமந்தையில இருந்து வாறாங்க. இந்த ஆளுங்கள் ரெடிபண்ணுங்க" அவன் ஒரு பட்டியலைத் தந்தான். பட்டியலின் ஆறுபேர் இந்த முகாமில் இருந்தனர். மீதிப் பேருக்காக இரண்டாம் புளொக்குக்குப் போனாள். அதற்குள் ஓமந்தை வாகனம் வந்து விட்டது. கூரையில்லாத வாகனத்தில், இந்தக் கொதிவெயிலில் கொண்டு வந்திருந்தாலும் காதலியரை, மனைவியரைப் பார்க்கும் ஆவலில் அவர்கள் மகிழ்ச்சியோடிருந்தனர். பார்வதியைக் கண்டதும் அவர்கள் "மம்மீ.. அன்ரீ" எனக் கூச்சலிட்டனர். பொலிஸார் எதுவும் பேசவில்லை.

பார்வதி விரைந்து சென்று பட்டியலில் உள்ள மற்றவர்களை அழைத்தாள். அவர்களில் ஒருத்தி பட்டியலை வாங்கிக் கொண்டு மற்றவர்களை அழைக்கப்போனாள்.

பார்வதி உதயாவைப் பார்க்கச் சென்றாள். தூயவள் செவ்வாய் விரதம் சாப்பாடு போட்டாள். பார்வதி சாப்பிடும் போது கத்திரிக்காய் பிரட்டல், மரவள்ளி பொரியல் , கிழங்கு ,குழம்பு, சொதி என கறிவகை பரிமாறினாள் தூயவள்.

"நீங்க இரண்டைக்கு மச்சம் சாப்பிட மாட்டீங்களோ?" என்றாள் உதயா.

"இந்த வாரத்தில் இன்றைக்கும், நாளைக்கும் தான் மச்சம் மாமிசம் சாப்பிடலாம்" பார்வதி இப்படிக் கூறியதும்,உதயா தனியாக மூடியிருந்த சட்டியிலிருந்து கோழிப்பொரியல் கொண்டு வந்து போட்டாள்.

பார்வதிக்கு உணவில் பிரியம் அதிகம். உடலில் நோய் இருந்தாலும் எது நல்லது, எது கூடாது என்று தெரிந்தாலும் இவளால் நாக்கை கட்டுப்படுத்தவே முடியாது. நன்றாக சாப்பிட்டுவிட்டு தன் முகாமுக்கு திரும்பினாள். வந்ததும் நல்ல தூக்கம் வந்தது. படுத்தாள். மாலையில் கொஞ்சம் எழுதினாள்.

(தொடரும்)


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

மார்கழி 2022

Transco™ CARGO

# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்




## Christmas Shipping Schedule

| CUT OFF | | EST ARIVAL IN SL | CUT OFF | | EST ARIVAL IN SL |
|---|---|---|---|---|---|
| August | 06 | Sep 13 | August | 20 | Sep 27 |
| August | 13 | Sep 20 * | August | 27 | Oct 04 |
| September | 03 | Oct 11 | September | 17 | Oct 25 |
| September | 10 | Oct 18 * | September | 24 | Nov 01 |
| October | 01 | Nov 08 | October | 22 | Nov 29 * |
| October | 08 | Nov 15 * | October | 29 | Dec 06 * |
| October | 15 | Nov 22 | | | |
| November | 05 | Dec 13 | November | 19 | Dec 27 |
| November | 12 | Dec 20 * | November | 26 | Jan 03 * |
| December | 03 | Jan 10 | December | 17 | Jan 24 |
| December | 10 | Jan 17 * | | | |
| 2023 | | | | | |
| January | 07 | Feb 17 | January | 21 | Mar 03 |
| January | 14 | Feb 24 * | January | 28 | Mar 10 * |

* Only at Campbellfield & Dandenong South Transco Offices




WE ARE DOING BUSINESS AS USUAL

45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255

follow us on

We love to deliver

SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 6152 8270 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167

1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU